# அருண் குமார் ஆகிய நான்,

‘‘ஏக இறைவன் ஒருவனைத் தவிர வேறு கடவுள் இல்லை; அவன் தனித்தவன்; அவனுக்கு இணைதுணை இல்லை என சாட்சி நான் அளிக்கிறேன். இன்னும் முஹம்மத் இறைவனின் தூதர் என்றும் அவனுடைய அடிமை என்றும் நான் சாட்சி அளிக்கிறேன்.’’



இஞ்சீனியர் அப்துல்லாஹ்

# அருண் குமார் ஆகிய நான்,

‘‘ஏக இறைவன் ஒருவனைத் தவிர வேறு கடவுள் இல்லை; அவன் தனித்தவன்; அவனுக்கு இணைதுணை இல்லை என சாட்சி அளிக்கிறேன். இன்னும் முஹம்மத் இறைவனின் தூதர் என்றும் அவனுடைய அடிமை என்றும் சாட்சி அளிக்கிறேன்.’’

– இஞ்சீனியர் அப்துல்லாஹ்


வெளியீடு:

**IPRC**

**இஸ்லாமியப் பதிப்பகம்**
**மற்றும் ஆய்வு மையம்**

**ISLAMIC PUBLICATIONS & RESEARCH CENTRE**

## ‘அருண் குமார் ஆகிய நான்’ நூல் விபரம்


பொருள் : கடவுளைத் தேடிய ஒரு பயணம்
அதில் நிகழ்ந்த நிகழ்வுகள்

ஆசிரியர் : Er. R. முஹம்மத் அப்துல்லாஹ் M.E., (EEE)

பக்கங்கள் : 40

முதல் பதிப்பு : ஜுமாதுல் அவ்வல் 1442 - டிசம்பர் 2020

வடிவமைப்பு : ஸஃபா கிராஃபிக்ஸ், மதுரை-20.
+91 9364414441.

வெளியீடு : இஸ்லாமியப் பதிப்பகம் மற்றும் ஆய்வு மையம்,
மதுரை-20. 0091 9364414441.
மின்னஞ்சல்: iprcindia2000@gmail.com

**விலை : ரூபாய் 30/-**

***ARUN KUMAR AAGIYA NAAN***

▣ *Author: ER. R. MOHAMMED ABDULLAH*

▣ *First Edition: SAFAR 1441 Hijri - Sep 2019* ▣ *Copies 2000* ▣

*Publications: IPRC, Madurai - 20. Ph: +91 - 93644-14441*

*E-mail: iprcindia2000@gmail.com*

***Price: INR 25/-***



**© IPRC - ISLAMIC PUBLICATIONS & RESEARCH CENTRE**

*All rights reserved for IPRC and Author only. No part of this publication may be reproduced or transmitted in any form or any information storage or retrieval system, without permission and written order from The Author or IPRC.*

*அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்....*

# பதிப்புரை

*புகழனைத்தும் ஏக இறைவனுக்கே!*

*தங்களின் கைகளில் தவழுகிற* **'அருண் குமார் ஆகிய நான்'** *எனும் இச்சிறு நூல் இஞ்சீனியர் R. முஹம்மத் அப்துல்லாஹ் M.E., அவர்களின் கடவுள் தேடுதலைக் குறித்த ஒரு தொகுப்பு ஆகும். யதார்த்தமாக எழுந்த பக்தி, அதன் பின்னர் ஏற்பட்ட விரக்தி, கல்லூரிக் காலங்களில் கிறிஸ்துவத்தின் அறிமுகம், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட மதமாற்றம், அதன் பின்னர் உண்மையான இறைவன் யார் என்ற தேடுதல், இறுதியாக இஸ்லாமை அறிந்து அதைத் தம் வாழ்வியல் நெறியாக ஏற்றல் ஆகிய நிகழ்வுகளைக் கூறக்கூடிய சிறியதொரு தொகுப்பே இது. இன்று நம் நாட்டில் பெரும் மதங்களாகக் கருதப்படுவது இந்து, கிறிஸ்துவம் மற்றும் இஸ்லாம் மதங்கள் தாம். நூலாசிரியர் இம்மூன்று மதங்களையும் அறிந்து அவற்றில், எது மெய் என தாம் கருதியதை ஏற்றுள்ளார்.*

*புதிதாக இஸ்லாமை ஏற்கும் சகோதரர்களுக்கு ஊக்கம் அளிப்பதில் இந்நூல் புதியதொரு கோணம். ஒருவர் இஸ்லாமை ஏற்பதால் உறவுகள் உயிரிழந்து போவதில்லை என்பதையும், பெற்றோரைப் பேணுதல், உறவுகளைக் காத்தல், நட்பை நீடித்தல் முதலியவை குறித்து இஸ்லாமிய விதிமுறைகள் என்ன என்பதையும் உறுதிபட தம் பெற்றோருக்கும், மற்றோருக்கும் இந்நூலின் ஆசிரியர் நன்றாகவே தெளிவுபடுத்துகிறார்.*

*இஸ்லாமிய அழைப்புப் பணிக்கு இந்நூல் துணைநிற்கும் என்ற நன்னோக்கில் இதை வெளியிடுவதில் எங்களின் இஸ்லாமியப் பதிப்பகம் மற்றும் ஆய்வு மையம் மகிழ்கிறது. இப்பணியில் துணைநின்ற அனைவருக்கும் நன்றியினைத் தெரிவிக்கிறோம்.*

*நூலாசிரியரின் இம்மை மறுமை வாழ்வு சிறக்க ஏக இறைவனை நாங்கள் பிரார்த்திப்பதோடு வாசக அன்பர்களையும் பிரார்த்திக்க வேண்டுகிறோம்.*

*அன்புடன்*

***Dr. சையது அலீ ஃபாத்திமா***

*நிறுவனர், இஸ்லாமியப் பதிப்பகம் மற்றும் ஆய்வு மையம்* ***(IPRC)***

*மதுரை*
*10.12.2020*

# முன்னுரை

*எல்லாப் புகழும் இறைவன் ஒருவனுக்கே உரித்தாகட்டும்!*

*அன்பு உள்ளங்கொண்ட என் இரத்த சொந்தங்கள், சொந்தங்கள், நண்பர்கள் மற்றும் தொப்புள்கொடி உறவுகள் அதாவது மனிதராகப் பிறந்துள்ள ஒவ்வொருவருக்கும் இறைவனின் அமைதியும் அருளும் நிலவட்டுமாக!*

*நான் எழுதத்துணிந்தவன் இல்லை; ஆனாலும், எழுதுகிறேன். மனிதநேயம் என்னை எழுதச் செய்கிறது. இரக்கம் என்னை எழுதத்தூண்டுகிறது. மனிதனாகப் பிறந்துள்ள யாரும் துன்பத்திற்கு உள்ளாகக் கூடாது; எனவே, எழுதுகிறேன்.*

*சாலையில் நாம் செல்கிறோம். அதில் ஒருவர் பலத்த காயங்களுடன் அடிபட்டு உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார். அவர் எப்படிப்போனால் நமக்கு என்ன என்று நம்மால் இருக்க முடியுமா?*

*ஆம்! நம்மால் முடிந்த உதவியைச் செய்தே தீருவோம். முடியாத பட்சத்தில் குறைந்தளவு அவருக்காக இரக்கப்படுவோம். இதுதான் மனிதம்; மனிதநேயம்!*

*நாம் செல்லும் அதே சாலையில் ஒருவரை பலர் ஒன்றுசேர்ந்து அடிக்கிறார்கள். நமக்கு மனிதநேயம் இருந்தால் அவரைக் காப்பாற்ற முயல்வோம்.*

*நம் வீட்டிற்கு அருகே ஒரு வீடு தீப்பற்றி எரிகிறது. நமக்கென்ன என்று நம்மால் இருக்க முடியாதல்லவா? நம்மால் முடிந்த உதவியைச் செய்வோம்.*

*நம் கண்களுக்கு முன்னால் பார்வையற்ற ஒருவர் கிணற்றிலோ, குழியிலோ விழப்போகிறார். நாம் ஓடிப்போய் அவரைக் காப்பாற்ற முயல்வோம் அல்லவா!*

*அதைத்தான் இப்போது நானும் செய்கிறேன். என் கண்களுக்கு முன்பாக நல்லவிதமாக வாழும் என் உறவுகள், நட்புகள், நான் சார்ந்துள்ள மக்கள் நாளை ஓர் ஆபத்திற்குள்ளாகப் போகிறார்கள். இதை என்னால் மிகச் சரியாக அறியமுடிகிறது. அந்த ஆபத்து குறித்து இவர்களை எச்சரிக்காமல் இருந்தால் நான் எப்படி மனிதன் ஆவேன்?*

*இந்த உலகில் வாழும் நாம், ஒரு நாள் மரணிப்போம்; இதை யாரும் மறுப்பதில்லை. மரணித்தப் பிறகு ஒரு நாள் நம்மை இறைவன் மீண்டும் எழுப்புவான்; இறைநம்பிக்கையுள்ள யாரும் இதையும் மறுப்பதில்லை. இறைவன் நமக்கு உயிர் கொடுத்து எழுப்பும் அன்று என்ன நடக்கும்?*

*உலக வாழ்க்கை நிரந்தரமற்றது; மறுமை வாழ்க்கையே நிரந்தரமானது. மறுமையில் நாம் சுவர்க்கத்தைப் பெறுவதே வெற்றி; நரகம் செல்வதோ தோல்வி. மனிதன் தன் இறைவனுக்குத் துரோகம் செய்வதால் அல்லது இறைவன் இல்லை என மறுப்பதால் அவன் நரகத்திற்குச் செல்கிறான்.*

*தனக்கு இணைகற்பிப்பதை (துரோகம் செய்வதை) ஏக இறைவன் மன்னிக்கவே மாட்டான். இதைத் தவிர வேறு எதையும், தான் நாடியோருக்கு மன்னிப்பான். ஏக இறைவனுக்கு இணை கற்பிப்பவன் பெரும் பாவத்தையே கற்பனையாகச் செய்கிறான். (திருக்குர்ஆன் 4:48)*

*ஏக இறைவனுக்கு இணைகற்பிப்பவனுக்கு இறைவன் சுவர்க்கத்தை விலக்கிவிட்டான். அவன் ஒதுங்குமிடமும் நரகமேயாகும், அக்கிர மக்காரர்களுக்கு உதவுவோரில் யாருமில்லை. (திருக்குர்ஆன் 5:72)*

*படைத்தவன் ஒருவனை மட்டுமே வணங்கவேண்டும். படைப் பினங்களை வணங்கக்கூடாது; படைப்பினங்களை வணங்குவதே இறைவனுக்கு இணைகற்பித்தல் - துரோகம் செய்தல் எனப்படும். இறைவனை விட்டுவிட்டு மனிதன் எதை வணங்குகிறானோ அதையும் அந்த மனிதனையும் ஒன்றாக இறைவன் நரகத்தில் சேர்ப்பான்.*

*ஏக இறைவனை மறுத்தவர்களுக்கு அதாவது அவனுக்கு இணை கற்பித்தவர்களுக்கு அவர்களின் செல்வங்களும், குழந்தைகளும் சிறிதும் பலன் அளிக்கப் போவதில்லை. அவர்களோ நரக நெருப்பின் எரிபொருள்களாவர். (திருக்குர்ஆன்3:10)*

*மனிதன் வணங்கிவரும் எப்பொருளும் அவனைக் காப்பற்றப் போவதில்லை; மனிதனையும் மனிதன் காணும் யாவற்றையும் படைத்து பாதுகாத்து வரும் இறைவன் ஒருவன் மட்டுமே ஒவ்வொன்றையும் காப்பாற்றும் ஆற்றல்மிக்கவன். அவன் இரண்டு பேர் அல்ல; மூன்று பேரும் அல்ல; பல கோடியும் அல்ல. இறைவன் ஒருவனே! நாம் அவனை மட்டுமே வணங்க வேண்டும். அவனை மறுக்கவும்கூடாது; அவனைத் தவிர வேறு எதையும் யாரையும் வணங்கவும் கூடாது. தவறினால் மறுமையில் கடுமையாக நிரந்தரமாகத் தண்டிக்கப்படுவோம் என்பதை எனக்கும் உங்களுக்கும் எச்சரிக்கையாகச் சொல்லிக் கொள்கிறேன்.*

*இந்நூல் வெளிவரக்காரணமாய் இருந்தவர்கள் அனைவருக் காகவும் இறைவனிடம் பிரார்த்திக்கிறேன்.*

*அன்புடன்*

***இஞ்சீனியர் அப்துல்லாஹ்***

# பொருளடக்கம்...


| | |
|---|---|
| கடவுளைத் தேடி... | 8 |
| பாதயாத்திரை | 9 |
| மாலை போடத் தடை | 9 |
| விருப்பத்தை நிறைவேற்றாக் கடவுள் | 10 |
| என்னுள் சில வினாக்கள் | 11 |
| பொறியியல் கல்லூரியில் | 11 |
| கிறிஸ்தவருடன் நட்பு | 12 |
| இறைவன் ஒருவனே! | 13 |
| இயேசுவை நேசித்தேன் | 15 |
| வீட்டிற்குத் தெரிந்தது | 16 |
| கர்த்தரும் அல்லாஹ்வும் | 17 |
| *M.E* மேற்படிப்பு | 17 |
| ஒரு முஸ்லிம் நண்பர் | 18 |
| தீரன் நகர் கிறிஸ்துவ சபையில் | 20 |
| இஸ்லாம் பற்றிக் கலந்துரையாடல் | 20 |
| மாற்றம் கண்ட என் மனம் | 21 |
| யார் இறைவன்? | 22 |
| விடை கிடைத்தது | 24 |
| நான் இஸ்லாமை ஏற்றேன் | 26 |
| அந்நியமாகத் தெரிந்த அல்லாஹ் எனும் வார்த்தை | 28 |
| சமூகம் கெடுவதும் சீரடைவதும் | 29 |
| யார் அந்தத் தீர்க்கதரசி | 30 |
| பெற்றோரின் எதிர்ப்பு | 34 |
| தடைகள் தளர்ந்தன | 35 |
| நான் எடுத்துரைத்த குர்ஆனின் வசனங்கள் | 36 |
| நான் எடுத்துரைத்த நபிமொழிகள் | 37 |

# அருண் குமார் ஆகிய நான்...

*நான் இறைவனைத் தேடி ஒரு பயணம் சென்றேன். அதில் எனக்குள் ஒரு மாற்றம் ஏற்பட்டது. ஆம், என் மனம் மாறியது. இஞ்சீனியர் அருண் குமாராக இருந்த நான், இஞ்சீனியர் முஹம்மத் அப்துல்லாஹ் என இன்று மாறியுள்ளேன். இது ஏன் எதற்கு என்பது குறித்த சிறியதோர் தொகுப்பே இது.*

*“யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” எனச் சொல்வோம் அல்லவா! அது போலதான் எனக்குக் கிடைத்த நேர்வழி எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணமே உங்களுடன் பேச என்னைத் தூண்டுகிறது.*

*நம் நாட்டில் மிக உயர்ந்த சாதிகள் முதல் மிகத் தாழ்ந்த சாதிகள் வரை என பல்லாயிரக் கணக்கில் சாதிகள் இருக்கின்றன. அவற்றில், இந்து மத சாதிப் பிரிவுகளாகக் கருதப்படும் நாயுடு சமூகத்தைச் சேர்ந்தவனாக நான் இருந்தேன்.*

*உண்மையில், இறைவனின் இயற்கையான மார்க்கத்தில்தான் நான் பிறந்தேன். நான் எந்தச் சாதியிலும் பிறக்கவில்லை. என் பெற்றோர் என்னை நாயுடுவாக வளர்த்தார்கள். ஆனால், இந்த உண்மை எனக்கு ரொம்பத் தாமதமாகத்தான் தெரிந்தது. பின்வரும் நபிமொழியை ஒன்றை படித்தப் பின்னர்தான் நான் இதைப் புரிந்துகொண்டேன்.*

*“ஒரு விலங்கு முழு வளர்ச்சி பெற்ற விலங்கைப் பெற்றெடுப்பது போல, ஒவ்வொரு குழந்தையும் இயற்கை மார்க்கத்தில்தான் பிறக்கின்றன.*

*அங்கஅவயம் சிதைக்கப்பட்ட நிலையில் விலங்குகள் பிறப்பதை பார்த்திருக்கிறீர்களா? (மனிதர்கள்தாம் அதன் உறுப்புகளை அறுத்துச் சேதப்படுத்துகின்றனர்)*

*இவ்வாறே பெற்றோர்தாம் தம் குழந்தைகளை யூதர்களாகவோ, கிறித்தவர்களாகவோ, நெருப்பை வணங்குபவர்களாகவோ ஆக்கி (இறைவனின் இயற்கை மார்க்கத்தை விட்டும் திருப்பி) விடுகின்றனர்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள். (நூல்: புகாரீ 1358, அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி)*

*மதங்களும், சாதிகளும் பிறப்பால் வருவதில்லை; பெற்றோரின் வளர்ப்பால் அரங்கேறுகின்றன.*

*இந்த நபிமொழியின் ஒரு பகுதியைத்தான், "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கயிலே; பின் நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே" என கவிஞர் கண்ணதாசன் கவி பாடினார். எப்படியோ எனக்கு நேர்வழிகாட்டிய என் இறைவனுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

## கடவுளைத் தேடி...

*நான் 8 ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது என் சுற்றுச் சூழல் என்னை கோவிலுக்கு அழைத்துச் சென்றது. என் அக்காள் நிகிலா சங்கரி, வெள்ளி மற்றும் செவ்வாய் கிழமைகளில் மாரியம்மன், விநாயகர் கோவிலுக்குச் சென்று வரும் வழக்கம் உடையவர். அவர் தம் தோழிகளுடன் கோவிலுக்குச் சென்று வருவார். அவரின் பக்தியைத் தொடர்ந்து பார்த்து வந்ததால் எனக்கும் கோவிலுக்கு போகும் ஆர்வம் உண்டானது. இப்படித்தான் எனக்குள் கடவுள் பக்தி ஏற்பட்டது..*

*12 ஆம் வகுப்பு முடிக்கும் வரை கோவிலுக்குச் சென்றுவரும் வழக்கம் என்னையும் தொற்றிக் கொண்டது. ஓம் நமசிவாயா மற்றும் ஓம் நமோ நாராயணா போன்ற நாமங்கள் என் உள்ளத்தில் ஓடிக் கொண்டே இருந்தன. ஆனால், இந்த இரண்டு கடவுளர்களும் பக்தர்களும் ஒருவருக்கொருவர் போரிட்டு பகைமை கொண்டவர்கள் என்ற விஷயம் எனக்கு பின்னர்தான் தெரியவந்தது. தேர்வுக் காலங்களில் பள்ளிக் கூடத்திற்கு செல்லும்போது நெற்றியில் பட்டையிட்டு, செருப்பணியாமல் பக்தியுடன் சென்று வருவதை வழமையாகக் கொண்டிருந்தேன்.*

*எங்கள் தெருவில் வருடந்தோரும் கார்த்திகை மாதம் முருகன் மற்றும் ஐயப்பன் கோவில்களுக்கு மக்கள் மாலைபோடுவார்கள். அவற்றைப் பார்த்த எனக்கும் மாலை போடவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அப்போது நான் 11 ஆம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். வீட்டில் பெற்றோரின் அனுமதியுடன் திருச்செந்தூர் முருகனுக்கு மாலை போட்டேன். மாலை போட்டிருக்கும் காலங்களில் பெண்களுடன் பேசக்கூடாது; சினிமா பாடல்கள் கேட்கக் கூடாது என்ற கட்டுப் பாட்டில் இருந்தேன். வீட்டிற்குள் நுழைந்துவிட்டால் காவி மற்றும் பச்சை நிற வேஷ்டிகள் அணிந்து கொள்வேன். அந்த நேரங்களில் தினமும் இருவேளை குளிப்பதை வழமையாகக் கொண்டிருந்தேன். மாலை நேரத்தில் கந்தன் கருணை ஆடியோ கேசட்டை போட்டு அதன் பாடல் வரிகளை மெய்மறந்து செவிக்கு விருந்தாக்கிக்*

*கொண்டிருப்பேன். வீட்டிலிருந்த முருகன், லட்சுமி, விநாயகர், திருப்பதி உள்ளிட்ட பல கடவுள்களின் புகைப்படங்களுக்கு மாலையிட்டு வணங்கிவந்தேன்.*

## பாதயாத்திரை

*நான் நேர்த்திக் கடன் செய்திருந்தபடி என் தந்தை மற்றும் சுற்றத்தாருடன் திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு பாதயாத்திரை சென்றேன். கற்களும் முற்களும் என் கால்களைப் பதம் பார்த்த போதெல்லாம் "ஓம், ஓம்" என்ற உச்சரிப்புடனேயே நான் என் பாதயாத்திரைத் தொடர்ந்தேன். மூன்றாம் நாள் என்னால் நடக்க முடியவில்லை. "நீ பஸ்ல போயிடுப்பா; கஷ்டப்படாதன்னு" என் அப்பா சொன்னார். முடியாது என்ன ஆனாலும் நான் நடந்தே தான் போவேன் என உறுதியாகக் கூறிவிட்டேன்.*

*இரவு நேரங்களில் சாலையின் ஓரங்களில் தென்படும் கோவில்களில் படுத்து ஓய்வெடுப்போம். நான்கு நாட்களில் இப்பயணம் நிறைவுற்றது. பாதயாத்திரையை முடித்ததும், "என் மகன் சாதித்து விட்டான் எனக் கூறி" என் தந்தை மிகவும் மகிழ்ந்தார்.*

*நாங்கள் திருச்செந்தூர் கோவிலுக்குச் சென்றதும், முருக பெருமானை வணங்கினோம். அன்று மாலை வரை கோவிலில் நேரத்தைக் கழித்தோம். கடல், ஆஹா என்ன அழகு! நான் அதை அதிசயமாகவே பார்த்தேன். அது என்னை ஈர்த்தது. மாலைப் பொழுதில் நாங்கள் அணிந்திருந்த மாலையை பாலில் நனைத்து கடலில் வீசினோம். அதன் பின்னர் பஸ் ஏறி எங்கள் வீட்டிற்குத் திரும்பினோம். நாளுக்கு நாள் கடவுள் பக்தி எனக்குப் பெறுகியது. இப்படித்தான் மனிதனை அவனுடைய சுற்றுச்சூழல்கள் மாற்றியமைக்கின்றன.*

## மாலை போடத் தடை

*ஓராண்டு உருண்டோடியது. நான் 12 ஆம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். முருகன் கோவிலுக்கு மீண்டும் மாலை போடு வதற்கு ஆயத்தமானேன். ஆனால், 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு என்பதால் நான் மாலை போடுவதை என் பெற்றோர் அனுமதிக்க வில்லை.*

*"கோவிலுக்கு மாலை போட்டே தீருவேன்" என நான் அடம் பிடித்தேன். "நீ இப்போது மாலை போடவே கூடாது" என என் பெற்றோர் சொன்னார்கள். நான் ஒரு சண்டையே போட்டு*

*விட்டேன் என்றால் பாருங்களேன்! இறுதியாக கோவிலுக்கு மாலை போடுவது தடைபட்டது.*

*பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு நல்லது எது, கெட்டது எது என்பதை பிரித்துக் காட்டக் கடமைப்பட்டவர்கள். அந்த அடிப்படையில் என் படிப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்கள் என்னைத் தடுத்தார்கள்.*

## விருப்பத்தை நிறைவேற்றாக் கடவுள்

*நம் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றுபவரே கடவுள்;*

*நமக்கு வரும் துன்பங்களை அகற்றுபவரே கடவுள்;*

*நம் வெற்றிக்குத் துணை நிற்பவரே கடவுள்.*

*இப்படித்தான் கடவுளைப் பற்றி நான் புரிந்து வைத்திருந்தேன். நான் வணங்கிவந்த என் கடவுளை முழுமையாக நம்பி இருந்தேன்; நான் கேட்பதை எல்லாம் என் கடவுள் கொடுப்பார் என எதிர்பார்த்திருந்தேன். நான் ஒரு M.B.B.S., டாக்டர் ஆகவேண்டும் என்ற ஆசை நீண்ட நாட்களாக எனக்கு இருந்தது. என்னுடைய நோட்டுப் புத்தகத்தில் அருண் குமார் M.B.B.S., என எழுதி வைத்துக் கொண்டு, அதைப் பார்த்து பார்த்து ரசித்து வந்தேன். எங்கள் வீட்டு கதவுகளில் அருண் குமார் M.B.B.S., பார்க்கும் நேரம் மாலை 6.00 முதல் 10.00 வரை என எழுதி வைத்து அதையும் பார்த்து ரசித்துவந்தேன்.*

*நான் வணங்கும் கடவுள் என்னை கைவிடமாட்டார்; கடவுள் என்னை எப்படியும் டாக்டர் ஆக்கிவிடுவார் என்ற நம்பிக்கை எனக்கு ஆழமாக இருந்தது.*

*நன்றாகப் படிக்கும் மாணவன் நான். வகுப்பில் எப்போதும் முதல் அல்லது இரண்டாம் மாணவனாகவே இருப்பேன். 12 ஆம் வகுப்பில் இயற்பியல் (Physics) தேர்வு எழுதும்போது 10 மார்க்கிற்கான கேள்விகளுக்கு பதில் அளிக்க எனக்கு நேரம் போதவில்லை. இதைத் தொடர்ந்து அடுத்த வந்த பரிட்சைகளில் எனக்கு ஆர்வம் குறைந்து விட்டது. எனவே, என்னால் சரியாகப் படிக்க இயலவில்லை. நான் M.B.B.S.படிக்கும் வாய்ப்பு நழுவியது.*

*ஒருவேளை நான் கோவிலுக்கு மாலை போடாததால் முருகபெருமான் என் ஆசையை நிறைவேற்றாமல் விட்டுவிட்டாரோ என்ற சந்தேகம் என்னுள் எழுந்தது. ஆனால், அப்படி இருக்கமுடியாது.*

காரணம், நான் மாலை போடுவதற்கு மறுக்கவோ வெறுக்கவோ இல்லை. என் பெற்றோர்தான் மறுத்தார்கள். அப்படி அவர் தண்டிப்பதாக இருந்தால் என்னைத் தண்டிப்பது நியாயமில்லை. மாலை போடவிடாமல் என்னைத் தடுத்து நிறுத்திய என் பெற் றோரைத்தான் அவர் இது குறித்து கேள்விகள் கேட்கவேண்டும்.

இருந்தாலும், என் ஆசை நிறைவேறாமல் போனதற்கு கடவுளைக் காரணம் கூறவிரும்பவில்லை. என் தேவைக்காகத்தான் நான் கடவுளை வணங்கிவந்தேன். என் தேவையை கடவுளால் நிறை வேற்றித் தரமுடியவில்லை. அந்தக் கடவுள் நினைத்திருந்தால் எனக்கு ஒரு வாய்ப்பு அளித்திருக்கலாம். ஆனால், நான் வணங்கி வந்த கடவுள் எனக்கு எதையும் சாதகமாக்கித் தரவில்லை. இனிமேல் கடவுளிடம் எனக்கு எந்தத் தேவையும் இல்லை என்ற எண்ணம் தோன்றியது. எனவே, கடவுளை வணங்கும் ஆர்வம் எனக்குக் குறைந்துவிட்டது.

## என்னுள் சில வினாக்கள்

ஆனால், சற்று மன அழுத்தத்துடன் சிந்திக்க ஆரம்பித்தேன். கடவுள் என்றால் யார்? அவர் எப்படி இருப்பார்? கல்லும் மண்ணும் கடவுளாக இருக்க முடியுமா என்றெல்லாம் பல கேள்விகள் என்னுள் எழுந்தன. இந்தக் கேள்விகளுக்குப் பிறகு கற்சிலைகளையும், படைப்பினங்களையும் கடவுளர்களாக என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இவற்றைக் கடவுள் என்றும், இவை நம்மைக் காப்பாற்றும் என்றும் நாம்தான் தவறாக விளங்கியுள்ளோம். உண்மையில் இவற்றிற்கு சக்தி எதுவும் கிடையாது. இது நமக்கு நன்மையும் செய்யாது; தீமையும் செய்யாது என்பதை உணர்ந்தேன். இனிமேல் கோவிலுக்குச் செல்லக்கூடாது; இவற்றை வணங்கவும் கூடாது என உறுதி எடுத்தேன். கடவுள் இல்லை; கடவுள் என்பது ஒரு கற்பனை என் பதில் உறுதியானேன். இருந்தாலும், இது குறித்து நான் யாரிடமும் கருத்துக் கூறியதோ, கலந்துரையாடியதோ கிடையாது.

## பொறியியல் கல்லூரியில்

மருத்துவம் படிக்க வாய்ப்புக் கிடைக்காததால் பொறியியல் படிக்கலாம் எனத் திட்டமிட்டேன். இது நானாக எடுத்த முடிவு.

மதுரை, P.T.R பொறியியல் கல்லூரியில் B.E., (ECE) படிப்பதற்காக 2005-2006 கல்வியாண்டில் சேர்ந்தேன். எங்கள் வீடு இருப்பதோ இராஜபாளையத்தில். அதனால் நான் ஹாஸ்டலில் தங்கி படிப்பைத் தொடங்கினேன். முதல் இரண்டு ஆண்டுகள் அங்கு தங்கினேன். என்னுடைய ஹாஸ்டல் வாழ்க்கையில் என் நண்பர்களுடன் அவர்களின் விருப்பத்தால் மீனாட்சி மற்றும் திருப்பரங்குன்றம் கோவில்களுக்குத் சென்று வந்தேன். ஆனால், என்னால் அந்தக் கடவுளர்களை வணங்க முடியவில்லை. அதற்கு என் மனம் இடம் கொடுக்கவில்லை. பொதுவாக இந்த இரண்டு ஆண்டுகளும் ஜாலியான காலமாகவே கழிந்தது.

கிரிக்கெட்டில் எனக்கு ரொம்பவே ஆர்வம். கல்லூரியின் கிரிக்கெட் அணியில் சேர்ந்தேன். தினமும் மாலையில் மதுரை ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் பயிற்சி பெற்றுவந்தேன். நான் படித்த கல்லூரியிலிருந்து மைதானம் வெகு தூரத்தில் இருந்தது. எனவே, மூன்றாம் ஆண்டு ஹாஸ்டலில் தங்காமல் மதுரை கோ.புதூரில் எனக்கு சீனியர் நண்பர் கண்ணாபிரபு தனியாக வீடு எடுத்து தங்கி இருந்தார். நானும் அவருடன் அந்த வீட்டில் இணைந்து கொண்டேன்.

## கிறிஸ்தவருடன் நட்பு

எங்களுடன் ஜெபா சிங் என்ற கிறிஸ்துவ நண்பர் ஒருவரும் தங்கி இருந்தார். அவர் மதுரை சட்டக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தார். அவருக்கு வயது 19. பொதுவாக இந்த வயதினருக்கு சினிமா ஆர்வம் அதிகமாக இருக்கும். ஆனால், இவர் சற்று வித்தியாசமாக இருந்தார். அவர் கிறிஸ்துவச் சபையில் கீ போர்டு மியூஸிக் வாசிப்பவர். ஆனால், அவருடைய மொபைல் போனில் சினிமா பாடல் ஒன்றுகூட இல்லை. அந்நியப் பெண்களுடன் தேவையில்லாமல் பேசமாட்டார். கேலி கிண்டல் பேசுவது அவருக்குப் பிடிக்காது.

இது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவரின் நற்குணங்களை நேசித்தேன். அவருடன் நல்ல நட்பு ஏற்பட்டது. அவர் எனக்கு பையிள் கொடுத்தார். முதலில் எனக்கு பெரிதாக அதில் ஆர்வம் ஏற்படவில்லை. சரி படித்துத்தான் பார்ப்போமே என்றுதான் படிக்க ஆரம்பித்தேன். தினமும் என் அறைக்குத் திரும்பியதும் மாலை 6 மணிக்கு மேல் பைபிள் படிக்கத் தொடங்குவேன். குறைந்தது 30 நிமிடங்கள் பைபிள் படித்துவந்தேன்.

நான் பைபிள் படிக்க ஆரம்பித்தப் பின்னர்தான் இறைவன் ஒருவன்தான்; நாம் அவனை மட்டும்தான் வணங்க வேண்டும் என்ற உண்மை எனக்குப் புரிந்தது. மனிதர்கள் அனைவரும் ஆதாம் ஏவாள் ஆகிய இருவக்குப் பிறந்த சகோதரர்கள் என்பதைப் புரிந்து கொண்டேன்.

## இறைவன் ஒருவனே!

கல்லையும், மண்ணையும் வணங்கக் கூடாது என்பது இப்போது தான் எனக்குத் தெளிவாகப் புரிந்தது. பைபிளில் என்னை மாற்றிய வசனங்கள் இதோ!

சொல்! இறைவன் ஒருவன் என்று, தேவனாகிய கர்த்தர் ஒருவனே. (மத்தேயு 12:29,30)

ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீ அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன். (யோவான் 17:3)

பைபிளின் மேற்கண்ட வசனங்கள் இறைவன் ஒருவன்தான் என்பதைத் தெளிவுபடுத்திவிட்டன. இதன்படியே மோசேவுக்கு இறைவன் வழங்கிய பத்துக் கட்டளைகளை பைபிளில் படித்தேன். அவை யாத்திராகமம் அதிகாரம் 20ல் 1 முதல் 17 வரை உள்ள வசனங்களில் இருந்து பெறப்பட்டவை.

1. தேவன் பேசிச் சொல்லிய சகல வார்த்தைகளுமாவன:

2. உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே.

3.என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

4.மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்;

5. நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்.

6. என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக் கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன்.

7. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

8. ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக;

9. ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக;

10. ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம்.

11. கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.

12. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

13. கொலை செய்யாதிருப்பாயாக.

14. விபசாரம் செய்யாதிருப்பாயாக.

15. களவு செய்யாதிருப்பாயாக.

16. பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

17. பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார். (யாத்திராகமம் அதிகாரம் 20 வசனங்கள் 1-17)

பத்துக் கட்டளைகளில் முதல் இரண்டு கட்டளைகள் இறைவன் ஒருவன்தான் என்பதையும், சிலைகளை வணங்கக்கூடாது என்பதையும் மிகத் தெளிவாக எடுத்துவைக்கின்றன.

இறைவன் மனிதனுக்கு உபதேசம் செய்யும்போது, முதலில் மிகப்பெரும் பாவத்தைப் பற்றித்தான் கூறவேண்டும். அதன்

பிறகுதான் அடுத்தடுத்து வரும் பாவங்கள் குறித்து எச்சரிக்க வேண்டும். பைபிள் அதன் வரிசைப்படியே கூறுகிறது.

இப்போது உங்களிடம் பெரும் பாவம் எது எனக் கேட்டால் நீங்கள் என்ன சொல்வீர்கள்?

மனிதனைக் கொலைசெய்வதுதான் மிகப்பெரும் பாவம் என்பீர்கள் அல்லவா? அதற்கடுத்து விபச்சாரம், திருட்டு எனப் பட்டியலிடு வீர்கள் அல்லவா?

இப்போது, நம்பிக்கைத் துரோகம் பெரிய பாவமா? கொலை பெரிய பாவமா எனக் கேட்டால், பெரும் பாவம் என எதைக் கூறுவீர்கள்.

ஆமாம் நம்பிக்கை துரோகம் தான் எல்லாப் பாவங்களையும் விடப் பெரிய பாவம் என உங்கள் மனம் ஒப்புக் கொள்கிறது.

இதைத்தான் பைபிளின் பத்து கட்டளைகளில் முதல் இரண்டு கட்டளைகளாக இறைவனுக்கு இணைகற்பிக்கக்கூடாது (துரோகம் செய்யக்கூடாது) சிலைகளை வணங்கக்கூடாது எனக் கூறுகிறது. இவற்றிற்குப் பின்புதான் மற்ற பாவங்களின் பட்டியலை பைபிள் சொல்கிறது.

## இயேசுவை நேசித்தேன்

ஜெபா சிங் ஒரு நாள் என் தலையில் தன் கையை வைத்து சுமார் 10 நிமிடங்கள் பெருத்த சப்தத்துடன் மிகவும் உருகியவராக ஜெபம் செய்தார்.

நீங்கள் பிற்காலத்தில், கிறிஸ்துவ திருச்சபைக்கு பெரிதும் ஊழியம் செய்வீர்கள் என ஜெபத்தில் அவர் கூறினார். இதைத் தொடர்ந்து நான் என் மனதில் ஏசுவின் இரத்தம் ஜெயம் என சொல்லிக் கொண்டு இருப்பதை வழமையாக்கினேன். இரவு நேரங்களில் படுக்கும்போது பைபிளை என் நெஞ்சின் மீது வைத்துக் கொண்டு தூங்கிவந்தேன். அந்த அளவிற்கு கிறிஸ்த்துவத்துடன் ஈடுபாடாக இருந்தேன்.

2010 ஏப்ரல் மாதம் புனித வெள்ளிக்கு முந்தைய திங்கட்கிழமை அன்று அண்ணா நகர் மதுரை கிறிஸ்துவ சபையில் நான் நீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றேன். அப்போது நான் B.E., பட்டப்படிப்பை முடித்துவிட்டு மதுரை இராமு சீதா பாலிடெக்னிக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

என்னுடன் மூன்று பெண்களும் ஞானஸ்தானம் எடுத்தனர். அப்போது என் பெயரை மாற்ற விரும்பாமல் தாய் தந்தை வைத்த

பெயரிலேயே கிறிஸ்துவத்தைத் தொடர்ந்தேன். இப்படியே சில காலங்கள் சென்றன. கிறிஸ்துவத்திற்கு ஊழியம் செய்ய ஆசை ஏற்பட்டது. அந்தத் திருச்சபையில் கீ போர்டு வாசிக்க எண்ணம் தோன்றியது.

என் நண்பர் ஜெபா சிங் மூலமாக மதுரையில் ஜான் என்ற நபரைச் சந்தித்தேன். அவர் Helping Hands To The Poor என்னும் N.G.O வில் அவர் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர் கீ போர்டு வாசிக்கத் தெரிந்தவர். அவர் எனக்கு கீ போர்டு வாசிக்கக் கற்றுக் கொடுத்தார். ஆனால், அவரிடம் Basic மட்டும் படித்தேன். அவருடன் நல்ல நட்பும் ஏற்பட்டது. நண்பர் ஜானுக்கு சொந்த ஊர் மதுரைக்கு அருகிலுள்ள விக்ரமங்கலம். அந்தக் கிராமத்தில் அவர் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக டியூசன் சொல்லிக் கொடுத்துவந்தார். நானும் அவருடன் சேர்ந்து அந்தக் கிராமத்தில் நற்பணிகளைச் செய்துவந்தேன். கிறிஸ்துவத்தை மக்களிடம் கொண்டு செல்லும் நோக்கத்தில் Jesus The King என்ற வாசகம் பதித்த ஸ்கூல் பேக் அன்பளிப்பாக அளித்தேன்.

கிறிஸ்துவத் திருச்சபையில் அருணாச்சலம் என்பவருடன் நல்ல நட்பு எனக்குக் கிடைத்தது. அவர் கிறிஸ்துவச் சபையில் துணை பாதிரியாராக இருந்தார். அவர் இந்து மதத்தில் பிறந்து கிறிஸ்து வத்தை ஏற்றவர். அவர் கிறிஸ்துவத்தில் முழுமையான ஈடுபாட்டுடன் இருந்தார். எனவே, அவரின் வாழ்க்கை என்னைக் கவர்ந்தது. அவரும் நானும் திருச்சபையில் சில நாட்கள் தங்கி முழுஇரவு ஜெபம் செய்துவந்துள்ளோம்.

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் கையில் பைபிளுடன் கிறிஸ்துவச் சபைக்குத் தொடர்ந்து சென்றுவந்தேன். பிரசங்கத்தில் பாதிரியார் சொல்லும் வசனங்கள் எனக்காகவே சொல்லப்படுவதாக எனக்குத் தோன்றியது. ஏதேனும் ஒரு ஞாயிற்றுக் கிழமை கிறிஸ்துவச் சபைக்குச் செல்லாமல் வேறு ஒரு காரியத்தில் ஈடுபட்டால், அது தோல்வியடையும் என நான் நம்பினேன். சபைக்குச் சென்றிருந்தால் நன்றாக இருக்குமே என்ற எண்ணம் தோன்றும்.

## வீட்டிற்குத் தெரிந்தது

கிறிஸ்துவத்தில் என்னுடைய இந்த ஈடுபாடு என் வீட்டிற்குத் தெரிந்திருந்தது. ஆனால், அவர்கள் முதலில் என்னை எதிர்க்க வில்லை. அக்கம் பக்கத்தில் வசித்தவர்கள் என் பெற்றோரிடம் “என்னங்க உங்க பையன் பைபிளைத் தூக்கிக் கொண்டு சர்ச்சுக்கு

போயிட்டே இருக்கான்” என்று கூறினார்கள். அதன் பிறகுதான் நான் கிறிஸ்துவ சபைக்குப் போவதை எங்க அம்மா தடை செய்ய ஆரம்பித்தார்கள். எந்த அளவுக்கு என்றால் ஞாயிற்றுக் கிழமை காலையில் என்னை குளிக்கவிடாமலும், நல்ல ஆடை அணிய விடாமலும் தடுத்து வைத்திருந்தார்கள். அதற்கெல்லாம் கட்டுப் பட்டவனாக நான் இல்லை. லுங்கி அணிந்து கொண்டே சபைக்குச் சென்றுவந்தேன். அந்த அளவுக்கு ஈடுபாடு என்றால் பாருங்களேன்.

## கர்த்தரும் அல்லாஹ்வும்

அப்போது எனக்கு இஸ்லாம் குறித்து எதுவும் தெரியாது. ஆனால், முஸ்லிம்கள் ஒரே கடவுளை மட்டும் வணங்குகிறார்கள் என்பதை மட்டும் அறிந்திருந்தேன். நண்பர் ஜானிடம், “முஸ்லிம்கள் யாரை வணங்குகிறார்கள்? அல்லாஹ் என்றால் யார்?” எனக் கேட்டேன்.

“நம் பிதாவாகிய தேவனைத்தான் அல்லாஹ் என அவர்கள் வணங்குகிறார்கள்” என ஜான் கூறினார்.

“அப்படியானால், அவர்களும், நாமும்தான் சரியான கடவுளை வணங்கிக் கொண்டிருக்கிறோம். இந்துச் சகோதரர்கள்தான் முன்னோர்களையும், இறைவனால் படைக்கப்பட்டுள்ள சூரியன் சந்திரன் போன்ற இயற்கைகளையும், கற்சிலைகளையும் கடவுளர்கள் என நம்பி வணங்குகிறார்கள். நாம் முஸ்லிம்களுக்கு எதையும் எடுத்துக் கூறவேண்டிய அவசியமில்லை; இறைவன் ஒருவன்தான் என்பதை இந்துக்களுக்கே நாம் எடுத்துச் சொல்லவேண்டும்" என நான் கூறினேன்.

## M.E மேற்படிப்பு

பிறகு மேற்படிப்பு M.E படிக்க முடிவு செய்து, நுழைவுத் தேர்வு (Tancet) எழுதினேன். நான் படித்திருந்தது B.E., (ECE). ஆனால், எனக்குக் கிடைத்தது M.E Power Electronics (EEE). ECEபாடப் பிரிவு கிடைக்கவில்லை. திருச்சி JJ கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் மேற்படிப்பைத் தொடங்கினேன். அங்கு கல்லூரி நண்பர்களுடன் தீரன் நகரில் வீடு வாடகைக்கு எடுத்துத் தங்கினோம். அங்கு சர்ச் ஆஃப் சத்திய சேனா சபையில் ஞாயிற்றுக் கிழமைகளில் ஆராதனைக்குச் சென்று வந்தேன். அங்கு ஜோஸுவா என்ற பாதிரியார் நல்ல நண்பராகக் கிடைத்தார். நான் அவருடன் சேர்ந்து ஞாயிற்றுக் கிழமை மாலைப் பொழுதில் பக்கத்துக்

கிராமங்களுக்கு ஊழியம் செய்யச் சென்று வந்தேன். ஏசு பற்றியப் பாடல்கள் பாடி நடனமாடி குழந்தைகளை மகிழ்வித்தேன். கிருஸ்துமஸ் அன்று கிருஸ்துமஸ் தாத்தா வேடம் அணிந்து குழந்தைகளுடன் நான் விளையாடிய அந்த நாட்களை இன்றும் மறக்கமுடியாது. நான் கிராமங்களுக்குச் செல்லாத நாட்களில் அருண் மாமா எங்கே? அவர் வரலயா எனக் குழந்தைகள் பாசத்துடன் பாதிரியாரிடம் கேட்பார்களாம்.

## ஒரு முஸ்லிம் நண்பர்

நான் கல்லூரியில் மேற்படிப்புப் படிக்கும் காலத்தில் உமர் அப்துல்லாஹ் என்ற நண்பர் அறிமுகமானார். அவர் இந்து சமூகத்தில் பிறந்து இஸ்லாமை ஏற்றவர். அவர், செந்தில் குமார் என்னும் தன் பெயரை மாற்றி உமர் அப்துல்லாஹ் எனப் பெயரை தனக்கு சூட்டியிருந்தார். இவர் ஏன் இஸ்லாமை ஏற்றார்? பொதுவாக எல்லோரும் கிறிஸ்துவத்தைத்தானே ஏற்பார்கள் என நான் எனக்குள் கேட்டுக் கொண்டேன். இவரை எப்படியாவது கிறிஸ்துவராக நாம் மாற்றிவிட வேண்டும் எனத் திட்டமிட்டேன். இருப்பினும், அவர் இஸ்லாமை ஏற்றதற்கான காரணத்தை நான் அவரிடம் கேட்டேன்.

அதற்கு, ஒரு நாள் நான் சாமி கும்பிட கோவிலுக்குச் சென்றேன். அந்தக் கோவிலில் ஒரு பெண் தெய்வச்சிலை நிர்வாணமாகக் காட்சி அளித்தது. அதைப் பார்த்ததும் எனக்கு வணங்கும் எண்ணம் இல்லாமல் போய்விட்டது. நான் ஓர் ஆண் என்பதால் அது எனக்கு கூச்சத்தை ஏற்படுத்தியது. ஆறு அறிவுகளைப் பெற்றுள்ள மனிதர்கள் நாம். நாமே நம் மானத்தை மறைக்க ஆடைகள் அணிகிறோம். ஆனால், நம்மைப் படைத்து பாதுகாத்து வரும் இறைவன் நம்மைவிட அறிவில் உயர்ந்தவன். அந்த இறைவன் எப்படி தன் மானத்தை மறைக்காமல், நிர்வாணமாகக் காட்சி அளிக்க முடியும் என எண்ணத் தோன்றியது. இறைவனுக்கு கண்ணியம் அங்கே கொடுக்கப் படவில்லை. அதன் பின்னர் நான் கோவிலுக்கு போவதைத் தவிர்த்தேன்.

அதற்குப் பின்பு நான் திண்டுக்கல் கிறிஸ்துவக் கல்லூரியில் B.E (EEE) படித்துக் கொண்டிருந்தேன். அங்கு இஸ்லாமிய நண்பர் ஒருவர் என்னுடன் படித்துக் கொண்டிருந்தார். நம்மைப் படைத்த இறைவன் ஒருவன்தான்; மனிதர்களுக்குப் பல கடவுள்கள்

இருக்க முடியாது. இதைத்தான் இஸ்லாம் கூறுகிறது எனக் கூறினார். ஆனால், அவர் கூறியதை நான் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் என் முஸ்லிம் நண்பரும் நானும் சென்னையில் வேலைக்குச் சேர்ந்தோம். நாங்கள் இருவரும் ஒரே வீட்டில் தங்க வேண்டியதாயிற்று. அப்போது, அவரின் பழக்க வழக்கங்கள் மற்றும் வணக்க வழிபாடுகள் என்னை யோசிக்க வைத்தன. அவர் அங்கு வைத்திருந்த திருக்குர்ஆன் தமிழாக்கப் பிரதியை எடுத்துப் படித்தேன். அப்போது திருக்குர்ஆனின் 112 வது அத்தியாத்தை நான் படிக்க நேர்ந்தது என உமர் அப்துல்லாஹ் கூறினார். அதில்,

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்..

(தூதரே) கூறும்: அல்லாஹ் - அவன் ஒருவனே.

அல்லாஹ் (யாரிடத்திலும்) தேவையற்றவன்.

அவன் பெறவுமில்லை; பெறப்படவுமில்லை.

இன்னும், அவனுக்கு நிகராக எவரும் இலர். (திருக்குர்ஆன் 112:1-4) என இருந்தது.

இந்த வசனங்கள் என்னை பெரிதும் யோசிக்க வைத்தன.

கடவுளுக்கு மனைவி மக்கள் தாய் தந்தையா அப்படியானால் அவர்களின் இனப்பெருக்கம் இன்றைக்கு எந்த அளவிற்கு இருக்க வேண்டும். நூறு கோடி மக்களைக் கொண்டுள்ள நம் இந்திய நாட்டில் நமக்கெல்லாம் பழமையான கடவுளர்கள் இன்று எத்தனை ஆயிரம் கோடிகள் இருக்க வேண்டும். அப்படி பல ஆயிரம் கோடி கடவுளர்கள் இருந்தால் அவர்களால் தங்களைத் தாங்களே பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடுமே என பல கோணங்களில் யோசிக்க ஆரம்பித்தேன்.

திருக்குர்ஆனின் இன்னும் சில வசனங்கள் என்னை ஈர்த்தன.

“சிறையிலிருக்கும் என் இரண்டு தோழர்களே! வெவ்வேறான பல தெய்வங்கள் நல்லதா? அல்லது தனித்தவனாக அடக்கியாளும் அல்லாஹ்வா?

“அவனைத் தவிர நீங்கள் வணங்கிக்கொண்டிருப்பவை நீங்களும், உங்களின் மூதாதையரும் சூட்டிய பெயர்களேதவிர வேறில்லை. அவற்றுக்கு அல்லாஹ் ஆதாரம் எதையும் அருளவில்லை.

அதிகாரம் அல்லாஹ்வுக்கே தவிர இல்லை. அவனைத்தவிர (யாரையும்) வணங்கக் கூடாது என உங்களுக்கு அவன் கட்டளையிட்டிருக்கிறான். இதுவே உறுதியான மார்க்கம். ஆனால், மனிதர்களில் பெரும்பாலோர் இதனை அறிவதில்லை. (திருக்குர்ஆன் 12:39,40)

இந்த வசனங்கள் எனக்குத் தெளிவை ஏற்படுத்தின. எனவே, நான் இஸ்லாமை ஏற்றுக் கொண்டேன் என உமர் அப்துல்லாஹ் கூறினார்.

இறைவன் ஒருவன்தான். அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என அவர் திரித்துவமாக இருக்கிறார் என நான் அவருக்குப் பதில் கூறினேன்.

## தீரன் நகர் கிறிஸ்துவ சபையில்

ஒரு நாள் நான் அவரை தீரன் நகர் கிறிஸ்துவ சபைக்கு அழைத்துச் சென்றேன். அவரும் எதுவும் பேசாமல் என்னுடன் வந்தார். பாதிரியாரிடம் அவரை அறிமுகம் செய்துவைத்தேன். இருவரும் பைபிள் மற்றும் குர்ஆன் குறித்து உரையாடினார்கள்.

பாதிரியார் ஏசுவைப் பற்றி எடுத்துரைத்தார். ஏசுவின் அற்புதங்கள் குறித்தும் கூறினார். ஏசுவே இரட்சகர்; பாவங்களிலிருந்து நம்மை மீட்க வந்தவர் என்றும் கூறினார்.

அதற்கு உமர் அப்துல்லாஹ், “ஏசு இறைவனின் தூதர்தான்; அவர் இறைவனின் துணையுடன் பார்வை இழந்தவர்களுக்கு பார்வை கொடுத்தல், வெண்குஷ்டத்தை நீக்குதல் போன்ற சில அற்புதங்கள் செய்தார் என்பதை விசுவாசிக் கிறோம். ஆனால், ஒருபோதும் அவர் கடவுளின் தன்மையை அடைய மாட்டார்; பாவங்களிலிருந்து மனிதனை அவரால் மீட்கவும் முடியாது என்பதிலும் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்” எனக் கூறினார்.

அவர்களின் உரையாடலைக் கவனமாக் கேட்டுக் கொண்டிருந்தேன். அந்த உரையாடல் அத்தோடு முற்றுப் பெற்றது. நாங்கள் எங்கள் அறைக்குத் திரும்பிவிட்டோம்.

நாள் ஒன்றுக்கு பைபிளிலிருந்து ஒரு வசனமாவது படிக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டுடன் இருந்து வந்தேன். சுமார் இரண்டு வருடங்கள் நாங்கள் இருவரும் திருக்குர்ஆன் மற்றும் பைபிளில் ஒற்றைக் கருத்துள்ள வசனங்களை அழகிய முறையில் விவாதித்து வந்தோம்.

## இஸ்லாம் பற்றிக் கலந்துரையாடல்

ஒருநாள், "நீங்கள் வணங்கும் ஏசு இறைவனின் தூதர்தான்; அவர் கடவுள் இல்லை என திருக்குர்ஆனில் உள்ளது'' என உமர் அப்துல்லாஹ் கூறினார்.

"திருக்குர்ஆனில், ஏசுவைப் பற்றி செய்திகள் இருக்கின்றனவா" என நான் வியப்பாக அவரிடம் கேட்டேன்.

"ஆமாம், உண்மையான பல செய்திகள் ஏசுவைப் பற்றி உள்ளது" என்றார்.

"திருக்குர்ஆனில், தீர்க்கதரிசிகள் ஆபிரஹாம், நோவா, யோவான், தாவீது, மோசே பற்றி எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறதா?" என நான் அவரிடம் கேட்டேன்.

"ஆம், நீங்கள் குறிப்பிடும் எல்லோரின் வரலாறும் திருக்குர்ஆனில் உள்ளது" என உமர் அப்துல்லாஹ் கூறினார்.

''நோவா கப்பல் கட்டிய வரலாறும், மோசே தம் தடியால் செங்கடலை இரண்டாகப் பிழந்த வரலாறும், ஆபிரஹாம் தம் மகனை இறைவனுக்காக பலியிடத் துணிந்த தியாக வரலாறும் திருக்குர்ஆனில் இருக்கிறதா?" என நான் கேட்டேன்.

"ஆம், இந்த வரலாறுகள் எல்லாமே திருக்குர்ஆனில் தெளிவாக இருக்கிறது" என உமர் அப்துல்லாஹ் கூறினார்.

எங்களின் இந்த விவாதம் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்தன. இஸ்லாம் குறித்த பல விஷயங்களை அவர் என்னிடம் கூறிவந்தார். அவர் சொன்ன விஷயங்கள் கொஞ்சம் கொஞ்சமாக என் மனதில் பதிந்து கொண்டே இருந்தன. ஆனால், எனக்கு திருக்குர்ஆன் பிரதியை அவர் கொடுக்கவே இல்லை. இதுவே கிறிஸ்தவராக இருந்தால் முதலில் பைபிளை கொடுத்துவிட்டுத்தான் பேசவே ஆரம்பிப்பார்கள். முஸ்லிம்கள் இப்படிச் செய்யாததால் இஸ்லாம் பலருக்கும் போய்ச் சேர்வதில் மிகவும் தாமதமாகிறது.

## மாற்றம் கண்ட என் மனம்

இவற்றை எல்லாம் கேட்ட எனக்கு ஒரு ஏக்கம் ஏற்பட்டது. அதாவது, முஸ்லிம்கள் இறைவனுக்கு ஒரு மாதம் முழுக்க நோன்பு நோற்கிறார்கள்; தினமும் ஐந்து வேளை தொழுகிறார்கள். ஆனால், நாம் ஞாயிற்றுக் கிழமை மட்டும்தான் இறைவனுக்கு

ஆராதனை செய்கிறோம். நாம் முஸ்லிம்களைப் போல நோன்பு நோற்பதில்லை. முஸ்லிம் கர்த்தரை மட்டுமே வணங்குகிறார்கள் நாமோ ஏசுவை வணங்குகிறோம் உண்மையில் ஏசுவைவிட கர்த்தர்தான் உயர்ந்தவர். எனவே, அவரை மட்டும் வணங்குவது தானே சரியாக இருக்கும் என எண்ணினேன்.

மேலும், முஸ்லிம்கள் அல்லாஹ் என்ற வார்த்தையில் இறைவனை அழைக்கிறார்கள். நாமோ பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என அழைக்கிறோம். இவ்வாறு அடிக்கடி சொல்வதற்கு சிரமமாக உள்ளது. ஆனால், அல்லாஹ் என்று சொல்வதில் எந்தச் சிரமும் இல்லை என்றும் தோன்றியது. இருப்பினும் தொடர்ந்து பைபிள் படித்துவந்தேன். ஒரு நாள் பைபிளின் பின்வரும் வசனங்களைப் படிக்க நேர்ந்தது.

அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார். (மாற்கு 13:32)

உலகம் அழியும் நாள் பிதாவுக்கு மட்டுமே தெரியும் ஏசுவுக்குத் தெரியாது என பைபிள் கூறுகிறது. இருவரும் ஒன்றாக இருந்தால் பிதாவுக்குத் தெரிந்த அனைத்தும் ஏசுவுக்கும் தெரிந்திருக்க வேண்டும். அப்படியானால் ஏசுவும் பிதாவும் எப்படி ஒன்றாக இருக்க முடியும் என்ற கேள்வி என்னுள் எழுந்தது.

## யார் இறைவன்?

மற்றொரு நாள் பின்வரும் வசனங்கள் என் கண்களில் பட்டன.

தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துறத்துகிறபடியால்... (லூக்கா 11:20)

நான் என் சுயமாக எதையும் செய்வதற்கில்லை. நான் கேட்கிறபடியே நியாயம் தீர்க்கிறேன். என்னை அனுப்பின பிதாவுக்கு சித்தமானதை நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாய் இருக்கிறது. (யோவான் 5:30)

தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. (யோவான் 1:18)

நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாய் இராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாய் இருக்கிறது. (யோவான் 14:24)

இந்த வசனங்களை நான் படித்தப் பின்பு இறைவன் திரித்துவமாய் இருக்கிறாரா அல்லது தனித்திருக்கிறாரா என்ற குழப்பங்கள் எனக்கு அதிகமாயின.

ஆவி, ஆத்மா, சரீரம் என நம் உடல் திரித்துவமாக இருப்பது போல நம் இறைவனும் திரித்துவமாகவே இருக்கிறார். மேலும், தண்ணீர் பனிக்கட்டியாக திடநிலையிலும், நீராகத் திரவ நிலையிலும், நீராவியாக வாயு நிலையிலும் திரித்துவமாக இருப்பது போல நம் இறைவனும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என திரித்துவமாக இருக்கிறார் என்றுதான் பாதிரியார்கள் எனக்குப் போதித்திருந்தார்கள். ஆனால், பைபிளின் மேற்கண்ட வசனங்கள் இதற்கு நேரெதிராக இருக்கின்றனவே என யோசித்தேன்.

பின்னர் பைபிளின் இன்னும் சில வசனங்கள் என்னை அதிகமாகவே சிந்திக்க வைத்தன.

அதற்கு இயேசு: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே. (மாற்கு 10:18)

என் பிதா என்னிலும் பெரியவராய் இருக்கிறார்.

ஆகிய வசனங்கள் என்னை இன்னும் சிந்திக்கத் தூண்டின. ஏசுவைவிட பிதாவே பெரியவர் என ஏசுவே கூறியுள்ளார். தம்மை நல்லவர் எனச் சொல்வதைக்கூட ஏசு விரும்பவில்லை என்றால், தம்மை கடவுள் என்று சொல்வதை ஏசு எப்படி விரும்புவார் என யோசிக்க வைத்தது.

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.

அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்.

அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன். (மத்தேயு 7:21-23)

பைபிளின் மேற்கண்ட வசனங்கள் என் மனம் மாறுவதற்கு முக்கியக் காரணங்கள் ஆயின.

இவ்வசனங்களை எல்லாம் படித்தப் பின்புதான் ஏசுவை வணங்க அஞ்சினேன். இனிமேல் கர்த்தரை மட்டுமே வணங்குவோம்; ஏசுவை வணங்க வேண்டாம் என முடிவு செய்தேன். இதைத் தொடர்ந்து கிறிஸ்துவ சபையில் கர்த்தரை மட்டுமே ஆராதனை செய்துவந்தேன். பாதிரியார் ஏசுவை ஆராதனை செய்யும்போது நான் ஆராதனை செய்யாமல் அமைதி காத்தேன்.

ஒரு நாள் ஞாயிற்றுக் கிழமை ஆராதனையில் ஸ்ரீவில்லிப்புத்தூர் எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள, A.G சபையில் பாதிரியார் ஏசுவுக்கு ஆராதனை செய்தார். என்னால் அந்தச் சபையில் இருக்க முடியவில்லை. கர்த்தருக்குச் செய்ய வேண்டிய ஆராதனையை இவர்கள் ஏசுவுக்குச் செய்கிறார்களே எனக் கலங்கினேன். அந்தச் சபையைவிட்டு வெளியேறி வீட்டிற்கு வந்துவிட்டேன். இருந்தாலும் எனக்குள் சந்தேகம் தொடர்ந்தது. எதையும் என்னால் உறுதியாகச் சொல்லமுடியவில்லை. எனவே, நீங்கள் திரித்துவமானவரா அல்லது தனித்தவரா என்பதை எனக்கு வெளிப்படுத்துங்கள் என நான் கர்த்தரிடம் பிரார்த்தனை செய்தேன். இதை நீங்கள் எனக்கு கட்டாயமாக வெளிப்படுத்தியே ஆகவேண்டும் என மூன்று மாதங்களாக மிகவும் உருக்கமாக வேண்டினேன்.

## விடை கிடைத்தது

மூன்று மாதங்கள் கழித்து இதற்கான விடை திருக்குர்ஆனில் எனக்குத் கிடைத்தது.

என்னுடைய M.E படிப்பு முடிந்தது. பல கல்லூரிகளில் வேலைக்கு நான் விண்ணப்பித்தேன். எங்கும் வேலை கிடைக்கவில்லை. இறுதியாக மணப்பாறை VKS பொறியியல் கல்லூரியில் எனக்கு வேலை கிடைத்தது. ஆனால், இந்தக் கல்லூரிக்கு நான் விண்ணப்பிக்க வில்லை. அங்கு வேலை பார்த்த என் நண்பரின் பரிந்துரையால் எனக்கு அங்கு வேலை கிடைத்தது. இதில் என்ன வியப்பு என்றால், என் நண்பர் உமர் அப்துல்லாஹ்வும் அதே கல்லூரியில் வேலைக்குச் சேர்ந்தார். இது இறைவனின் ஏற்பாடாகவே நான் கருதுகிறேன்.

நாங்கள் இருவரும் கல்லூரிக்கு அருகில் வையம்பட்டி என்ற ஊரில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்துத் தங்கினோம். கல்லூரி முடிந்த மாலை நேரங்களில் நாங்கள் படிக்கும் காலத்தில் விவாதித்து வந்தது போலவே மீண்டும் எங்கள் விவாதங்களைத் தொடங்கினோம். நாங்கள் தங்கியிருந்த வீட்டில் திருக்குர்ஆன் தமிழாக்கப் பிரதி ஒன்றை அவர் வைத்திருந்தார்.

ஏசு குறித்து திருக்குர்ஆன் என்ன கூறுகிறது என்பதை ஆராய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அங்கிருந்த குர்ஆனை நானாகவே எடுத்து ஏசு குறித்த செய்திகளைத் தேடிப்படித்தேன்.

திருக்குர்ஆனின் பின்வரும் வசனங்கள் என் மாற்றத்திற்குக் காரணமாயின.

“மர்யமின் மகன் ஈஸாவே, அல்லாஹ்வைத் தவிர, என்னையும், என் தாயையும், இரண்டு கடவுளர்களாக்கிக் கொள்ளுங்கள் என மனிதர்களிடம் கூறினீரா?” என்றும் இறைவன் கேட்பான்.

அப்போது அவர், “நீ மிகவும் தூயவன். எனக்கு உரிமையில்லாததை நான் சொல்வதற்கில்லை. அவ்வாறு நான் கூறியிருந்தால், நீ அதை நிச்சயம் அறிந்திருப்பாய்; என் மனதில் உள்ளதை நீ அறிகிறாய். உன் உள்ளத்தில் இருப்பதை நான் அறியமாட்டேன். நீயே மறைவானவற்றை நன்கறிந்தவன்” என அவர் கூறுவார்.

“நீ எனக்குக் கட்டளையிட்டபடி, ‘என் இறைவனும், உங்களின் இறைவனுமாகிய அல்லாஹ்வையே வணங்குங்கள்’ என்பதைத் தவிர வேறு எதையும் அவர்களுக்கு நான் கூறவில்லை. மேலும், நான் அவர்களுடன் இருந்த காலமெல்லாம் அவர்களைக் கண் காணிப்பவனாய் இருந்தேன். அதன் பின்னர் நீ என்னைக் கைப் பற்றியதும் நீயே அவர்களின் மீது கண்காணிப்பவனாய் இருந்தாய். நீயே ஒவ்வொரு பொருளின் சாட்சியாளன்” (என்றும்),

“(இறைவனே!) நீ அவர்களை தண்டித்தால், அவர்கள் உன் அடியார் களே! நீ அவர்களை மன்னித்தால், நிச்சயமாக நீயே மிகைத்தவன்; ஞானம் மிக்கவன்” (என்றும் கூறுவார்). (திருக்குர்ஆன் 5:116-118)

திருக்குர்ஆனின் மேற்கண்ட வசனங்கள் என் மனமாற்றத்திற்கு முக்கியப் பங்கு வகித்தன. நான் இஸ்லாமை ஏற்றுக் கொள்ளும் முடிவுக்கே வந்துவிட்டேன். அந்த நாளின் இரவில் நான் அதிகமாக யோசிக்க ஆரம்பித்தேன். இந்து மதத்தில் இறைவன் ஒருவனை மட்டும் வணங்காமல் கண்டதை எல்லாம் கடவுள் என மக்கள் நம்புகிறார்கள். அது தவறு எனக் கருதியே கிறிஸ்துவத்துக்கு வந்தோம். ஆனால், இங்கேயும் பிரச்னையாய் இருக்கிறது. இவர்கள் இறைவனுடன் சேர்த்து இறைத்தூதரையும் வணங்குகிறார்கள்.

ஆக, உலகில் அதிகமான மக்கள் வழிகேட்டில்தான் இருக்கிறார்கள்; சரியான கடவுள் கோட்பாட்டில் இல்லை. இவர்கள் இறைவனுக்கு இணைவைத்த இதே நிலைமையில் மரணித்தால் நரகத்திற்குச்

சென்றுவிடுவார்களே என்பதை நினைத்து என் கண்களிலிருந்து என்னையும் அறியாமல் கண்ணீர் வழிந்தோடியது. இவர்கள் அனைவருக்கும் உண்மையான மார்க்கம் மற்றும் இறைவன் குறித்து எடுத்துரைக்கும் கடமை எனக்கும் இருக்கிறது.

## நான் இஸ்லாமை ஏற்றேன்

அன்று இரவு தூங்குவதற்கு முன், நாளைக் காலையில் என்னை பள்ளிவாசலுக்கு அழைத்துச் செல்லுமாறு என் நண்பர் உமர் அப்துல்லாஹ்விடம் கூறினேன். ஆனால், அவர் என்னை அன்று அழைத்துச் செல்லவில்லை. என்னை பள்ளிவாசலுக்கு அழைத்துச் செல்லாததற்குக் காரணம் கேட்டேன்.

நீங்கள் நன்றாக உறங்கிக் கொண்டிருந்ததால் இடையூறு செய்திட விரும்பாமல் நான் மட்டும் சென்றேன் என அவர் கூறினார்.

நான் தூங்கிக் கொண்டிருந்தாலும் நாளை என்னை பள்ளிவாசலுக்கு கண்டிப்பாக அழைத்துச் செல்ல வேண்டும் என நான் கூறினேன்.

அவரும் சரி என சம்மதித்தார். அதேபோல் மறுநாள் காலையில் பள்ளிவாசலுக்கு என்னை அவர் அழைத்துச் சென்றார். பள்ளி வாசலில் நுழைவாயிலுக்கு முன்பாக நின்று, நீங்கள் இஸ்லாமை ஏற்றுக் கொள்கிறீர்களா என என்னிடம் கேட்டார்.

ஆம், நான் ஏற்றுக் கொள்கிறேன் என்றேன்.

அப்படியானால் நான் சொல்வதைத் திரும்பக் கூறுங்கள் என அவர் கூறினார்.

அவர் அரபு மொழியில் சில வாசகங்களைக் கூறி அதற்குப் பின் அதன் தமிழாக்கத்தையும் கூறினார். அவர் கூறியவாறே நானும் கூறினேன். இதோ அந்த வாசகங்கள்!

ஏக இறைவனைத் தவிர வேறு கடவுள் இல்லை; அவன் தனித்தவன்; அவனுக்கு இணை துணை இல்லை என நான் உறுதியளிக்கிறேன்.

இன்னும், முஹம்மத் இறைவனின் அடியார் மற்றும் தூதர் என்றும் நான் உறுதியளிக்கிறேன்.

ஆனால், எனக்கு முஹம்மத் அவர்களைத் தூதராக ஏற்கும் மனநிலை அப்போதைக்கு இல்லை. ஏனெனில், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) பற்றிய வரலாறு எனக்கு அப்போது சுத்தமாகத் தெரியாது. தெரியாத ஒரு நபரை என்னால் எப்படி தூதராக ஏற்கமுடியும்?

எனவே, அல்லாஹ்வை மட்டும் இறைவனாக ஏற்றுக் கொண்டு பள்ளிவாசலுக்குள் நுழைந்தேன்.

இஸ்லாம் மார்க்கத்தை மக்களுக்கு எடுத்துரைப்போர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வரலாற்றை எடுத்துரைப்பது கட்டாயம் என்பதை இப்போது நான் உணர்கிறேன். எனக்கு இந்த வரலாறு தெரிந்திருந்தால் நான் முதன்முதலாக பள்ளிவாசலுக்குள் நுழைந்தபோதே முஹம்மத்(ஸல்) அவர்களை இறைத்தூதராக ஏற்றிருப்பேன். நான் காலம் கடந்து அவர்களைத் தூதராக ஏற்றதற்கு வரலாறு அறியாமை ஒரு காரணமாயிற்று.

நாங்கள் பள்ளிக்குள் நுழைந்தோம்; அங்கே தொழுகை நடத்தும் இமாம் ஒருவர் இருந்தார். அவர் ஃபஜ்ர் தொழுகை இரண்டு ரக்அத்துக்கள் தொழவைத்தார். அப்போது அது என்னவென்றே எனக்குத் தெரியாது. அவர்கள் நின்று, குனிந்து, சாஷ்டாங்கம் செய்து வணங்கியது போலவே நானும் இறைவனை வணங்கினேன் அவ்வளவுதான். அவர் சொன்ன அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் என்பதை மட்டும் நானும் என் மனதுள் கூறிக் கொண்டேன்.

ஆனால், அல்லாஹ் என்ற வார்த்தையின் மூலம் இறைவனை வணங்குவதில் எனக்கு தயக்கம் ஏற்பட்டது. எனவே, நான் ஆதாமின் இறைவனே! நோவாவின் இறைவனே! ஆபிரஹாமின் இறைவனே! மோசேயின் இறைவனே! ஏசுவின் இறைவனே! வானங்கள் மற்றும் பூமியைப் படைத்தவனே! உன்னைத்தான் நான் வணங்குகிறேன். உன்னைத் தவிர வேறு யாரையும் நான் வணங்கவில்லை என்று கூறி இறைவனிடம் பிரார்த்தித்தேன். இது இரண்டு நாள்கள் நீடித்தது.

தொழுகை முடிந்ததும் என்னை இமாமிடம் என் நண்பர் அறிமுகப்படுத்தினார். என் நண்பரின் பெயரைக் கேட்ட இமாம் எனக்கு முஹம்மத் அப்துல்லாஹ் எனப் பெயரிட்டார். என் பெற்றோர் சூட்டிய பெயரை மாற்ற எனக்கு விருப்பமில்லை. முஹம்மத் அப்துல்லாஹ் என்ற பெயருக்கு அர்த்தம் என்ன என்று கேட்டேன். அல்லாஹ்வின் அடிமை என்று கூறினார். அது எனக்கு பிடித்துவிட்டது. சரி இப்பெயரையே வைத்துக் கொள்வோம் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்.

முஹம்மத்(ஸல்) அவர்களின் வரலாறை எனக்குக் கூறுங்கள் என இமாமிடம் நான் கேட்டேன். அவர் அந்த வரலாற்றுச் சுருக்கமத்தை மட்டும் கூறினார்.

முஹம்மத்(ஸல்) ஏதேனும் அற்புதங்கள் நிகழ்ந்தியுள்ளாரா என நான் கேட்டேன்.

அல்லாஹ்வின் உதவியுடன் சந்திரனை இரண்டாகப் பிளந்திருக் கிறார் இன்னும் பல அற்புதங்கள் செய்துள்ளார் என அவர் கூறினார்.

பின்னர் இமாம் எனக்கு முஹம்மத்(ஸல்) அவர்களின் வரலாற்றுப் புத்தகம் ஒன்றை வழங்கினார். நான் அந்தப் புத்தகத்தைப் படித்தும், இஸ்லாமிய நண்பர்களிடம் முஹம்மத் நபி குறித்துக் கேட்டும் தெரிந்து கொண்டேன். இதற்கிடையில் The Message என்ற இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) வரலாற்றுத் திரைப்படம் ஒன்றைப் பார்த்தேன். என் நண்பர்கள் அதன் DVD என்னிடம் கொடுத்தார்கள்.

அதற்குப் பின்புதான் இறைத்தூதர்களின் வருகை மற்றும் இறைவனின் இறுதித்தூதர் குறித்த முன்னறிவிப்பு போன்ற செய்திகளை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

## அந்நியமாகத் தெரிந்த ‘அல்லாஹ்’ எனும் வார்த்தை

அல்லாஹ் என்ற வார்த்தை எனக்கு அந்நியமாகத் தெரிந்தது. பின்னர் என் நண்பரிடம் அல்லாஹ் என்ற வார்த்தைக்கு என்ன பொருள் எனக் கேட்டேன்.

அல்லாஹ் என்னும் அரபு வார்த்தைக்கு தமிழில் இறைவன் அல்லது கடவுள் என்று பொருள். உதாரணத்திற்கு Water என நாம் ஆங்கிலத்தில் சொன்னால் அதற்கு தமிழில் தண்ணீர் என்றும், ஹிந்தியில் பானி என்றும், கன்னடத்தில் நீர் என்றும் பொருள். வார்த்தை வெவ்வேறு மொழிகளில் இருந்தாலும் அதன் பொருள் ஒன்றே! அதே போல அல்லாஹ் The God என்றாலும் தமிழில் இறைவன், கடவுள் என்றாலும், ஹிந்தியில் பகவான் என்றாலும் இறைவன் ஒருவனையே குறிக்கிறது என உமர் அப்துல்லாஹ் கூறினார்.

மேலும், தமிழ் பைபிளில் இடம் பெற்றுள்ள பிதா என்ற வார்த்தை அரபு பைபிளில் எவ்வாறு உள்ளது என இன்டர்நெட் முழுக்கப் பார்த்தேன். அங்கு அல்லாஹ் என்றே இருந்தது.

இந்த விளக்கம் எனக்குத் தெரிந்தப் பின்னர்தான் பள்ளிவாசலில் அல்லாஹ் என்ற வார்த்தையை பயன்படுத்தத் தொடங்கினேன்.

# சமூகம் கெடுவதும் சீரடைவதும்

ஒரு சமூகம் சீர்கெட்டுப்போகும் போதெல்லாம் இறைவன் ஒரு தூதரை அனுப்பி அவர்களை நேர்வழிப்படுத்துவான் என்றுதான் வேதங்கள் கூறுகின்றன. திருக்குர்ஆனும் இப்படித்தான் கூறுகிறது.

*மனிதர்கள் ஒரே கூட்டத்தாராகவே இருந்தனர். நற்செய்தி கூறுபவர்களாகவும், (அச்சுறுத்தி) எச்சரிப்பவர்களாகவும் தூதர்களை அல்லாஹ் அனுப்பினான். அத்துடன் மனிதர்களிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பதற்காக அவர்களுக்கு வேதத்தையும் சத்தியத்துடன் அருளினான். எனினும் அவ்வேதம் வழங்கப் பெற்றவர்கள் தெளிவான ஆதாரங்கள் வந்த பின்னரும் தங்களுக்கு இடையே உண்டான பொறாமையால் மாறுபட்டார்கள்.*

*எனினும், அவர்கள் மாறுபட்ட உண்மையின் பால் நம்பிக்கையாளருக்குத் தன் அருளால் அல்லாஹ் நேர்வழிகாட்டினான். இவ்வாறே, அல்லாஹ், தான் நாடியோரை நேர் வழியில் நடத்துகிறான். *திருக்குர்ஆன் 2:213)*

*இம்முறைப்படிதான் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை அல்லாஹ் தன் தூதராக அனுப்பினான். அது முந்தைய வேதங்களிலும் முன்னறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது.*

*மூஸாவைப் போன்ற ஒரு தீர்க்கதரிசி வருவார் என பைபிள் கூறுகிறது. முன்னறிப்புச் செய்யப்பட்ட அந்தத் தூதர் இயேசு தான் என கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். ஆனால், இஸ்ரவேல் சமூகத்தில் மோஸேவைப் போன்ற ஒரு தீர்க்கதரிசி வந்ததில்லை என பைபிளே கூறுகிறது. அதே வேளை முஹம்மத் நபியை மூஸா நபிக்கு ஒப்பிட்டுத் திருக்குர்ஆன் பேசுகிறது. குறித்த இந்த முன்னறிவிப்புக்குப் பொருத்தமானவர் முஹம்மத் நபியா? அல்லது இயேசுவா? இருவரில் அந்த முன்னறிவிப்புக்குரியவர் யார் என்பதை ஆராய்ந்தால்,*

*அவர்களுக்காக ஒரு தீர்க்கதரிசியை அனுப்புவேன் என்றுதான் முன்னறிவிப்புச் செய்யப்படுகிறது. கிறிஸ்தவர்களில் அதிகமானவர்கள் இயேசுவைக் கடவுள் என்று நம்புகின்றனர். அப்படியிருக்கும் போது அவர்கள் இந்த முன்னறிவிப்புக்கு எப்படி உரிமை கோர முடியும்? ஒன்றில் இயேசுவை தீர்க்கதரிசியாக மட்டும் நம்பி அவர் கடவுளோ கடவுளின் தன்மையில் பங்குள்ளவரோ அல்லர்*

என நம்பிக்கை கொண்டு இந்த உரிமையைக் கோரினால் ஓரளவு நியாயம் இருப்பதாகக் கூறலாம்.

தேவன் தானே வரப்போவதாகக் கூறவில்லை. ஒரு தீர்க்கதரிசியை அனுப்புவதாகத்தான் கூறினார். இயேசுவைக் கடவுளின் குமாரன், கடவுள் தன்மையில் பங்குள்ளவர் என நம்பிக் கொண்டு இந்த முன்னறிவிப்பு இயேசுவைத்தான் குறிக்கும் எனக் கிறிஸ்தவ உலகு நம்புவது முரண்பாடானதாகும்.

## யார் அந்தத் தீர்க்கதரிசி?

அடுத்து மூஸாவைப் போன்ற தீர்க்கதரிசி இஸ்ரவேல் சமூகத்தில் தோன்றுவார் எனக் கூறப்படவில்லை. அவர்களின் சகோதரர்களின் மத்தியில் இருந்து தோன்றுவார் என்றுதான் கூறப்பட்டுள்ளது. இஸ்ரவேலர்களின் சகோதரர்கள் இஸ்மவேலர்கள் ஆவர். முஹம்மத் நபி(ஸல்) இஸ்மவேல் சமூகத்தில் தோன்றிய இறைத் தூதர் ஆவார்கள்.

இப்ராஹீம் நபிக்கு இஸ்மாயீல் (இஸ்மவேல்) இஸ்ஹாக் (ஈஸாக்) என இரண்டு மகன்கள் இருந்தனர். ஈஸாக்கின் புதல்வர்தான் யஃகூப் நபி. இவருக்கு 12 ஆண் குழந்தைகள். யஃகூப் நபிதான் இஸ்ராயீல் என அழைக்கப்பட்டார். அவரின் சந்ததிகள் பனூ இஸ்ராயீல் என அழைக்கப்பட்டனர். அவர்களின் பரம்பரையினர் தான் இஸ்ராயீல் சமூகம் என அழைக்கப்படுகிறது.

மோஸேயைப் போன்ற இறைத்தூதர் இஸ்ரவேல் சமூகத்தின் சகோதரர்கள் மத்தியில் தோன்றுவார் எனக் கூறப்பட்டுள்ளது. இஸ்ரவேல் சமூகத்தின் சகோதரர்கள் இஸ்மவேல் சமூகத்த வராவார்கள். அந்தப் பரம்பரையில் வந்தவர்தான் முஹம்மத் நபி. இந்த அடிப்படையில் இந்த முன்னறிவிப்பு முஹம்மத் நபியைத் தான் குறிக்கும். இஸ்ரவேல் சமூகத்தைச் சேர்ந்த இயேசுவை ஒரு போதும் குறிக்காது.

இயேசு, முஹம்மத், மோஸே ஆகிய தூதர்களை ஒப்பிட்டுப் பார்த்தால் முஹம்மத் நபிக்கும் மூஸா நபிக்கும் இடையில்தான் ஒற்றுமைகள் அதிகமாக இருப்பதைக் காணலாம்.

இப்படிப் பார்த்தால் மோஸேவிற்கும் இயேசுவிற்கும் இடையில் பல முரண்பாடுகள் இருப்பதை அறியலாம்.

பணிகள், போராட்டங்கள், வெற்றிகள், சோதனைகள் என அனைத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் மோஸேவுக்கும் முஹம்மத் நபிக்கும் மத்தியில் பல ஒற்றுமை இருப்பதை உறுதியாக அறியலாம்.

எனக்குப் பிறகு ஒருவர் வருவார். அவர் நியாயம் தீர்ப்பார். சட்டத்தை நிலைநாட்டுவார் என இயேசுவே கூறியுள்ளார். இயேசு சட்டத்தை நிலைநாட்டுபவராக அதிகாரம் உள்ளவராய் இருக்கவில்லை.

நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை அதைத் தேடி நியாயந்தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார். (யோவான் 8:50) என இயேசுவே கூறியுள்ளார்.

மோஸேவைப் போன்ற அந்தத் தூதர் எழுத, வாசிக்கத் தெரியாதவராக இருப்பார்:

என் வார்த்தைகளை அவர் வாயில் அருள்வேன் என்ற வாசகம் இதை உணர்த்துகிறது. மூஸா நபிக்கு வேதம் எழுத்து வடிவில் கொடுக்கப்பட்டது. முஹம்மத் நபி இது விஷயத்தில் மூஸாநபிக்கு மாறுபடுகின்றார். முஹம்மத் நபி எழுத, வாசிக்கத் தெரியாதவர் என்பதால் தேவனின் வார்த்தைகள் அவர் வாயில் அருளப்படும். அதை அவர் சொல்வார் எனக் கூறப்பட்டுள்ளது.

நபி(ஸல்) குறித்து முந்தைய வேதங்களில் எழுத வாசிக்கத் தெரியாத உம்மி நபி என எழுதப்பட்டிருப்பதாகக் குர்ஆனும் குறிப்பிடுகிறது. மோஸேயைப் போன்ற தீர்க்கதரிசி எழுத வாசிக்கத் தெரியாதவர். அதை இந்த முன்னறிவிப்புக் கூறுகிறது.

முஹம்மத் நபி எழுத, வாசிக்கத் தெரியாதவராய் இருந்தார்கள். ஆனால், இயேசு எழுத, வாசிக்கத் தெரிந்தவராக இருந்தார் என பைபிள் கூறுகிறது.

தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து, தம் வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெபஆலயத்தில் பிரவேசித்து, வாசிக்க எழுந்து நின்றார்.

அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் அவரிடத்தில் கொடுக்கப்பட்டது. அவர் புஸ்தகத்தை விரித்தபோது, (லூக்கா: 4:16-18)

இச்செய்தி மூலம் இயேசு எழுத வாசிக்கத் தெரிந்தவர் என்பது உறுதியாகிறது. மோஸேயைப் போன்ற தீர்க்கதரிசி எழுத வாசிக்கத் தெரியாதவர் என்பதால் அந்த முன்னறிவிப்புக்கு முஹம்மத் நபியே உரித்தானவர்.

மோஸேவைப் போன்ற இறைத்தூதரின் மார்க்கம் முழுமை பெறும்.

நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்வார் என்ற வாசகம் மூலம் இது உணரப்படுகிறது. இந்த வார்த்தை அவர் இறுதி நபியாக இருப்பார் என்பதையும் உணர்த்துகிறது. முஹம்மத் நபியின் போதனை முழுமை பெற்றது. அவருக்கு அருளப்பெற்ற அல்குர்ஆன் இப்படிக் கூறுகிறது.

இன்றைய தினம் உங்களுக்காக உங்களின் மார்க்கத்தைப் முழுமை யாக்கி விட்டேன். உங்கள்மீது என் அருட்கொடையையும் முழுமை யாக்கிவிட்டேன். இன்னும், உங்களுக்காக இஸ்லாமை உங்களின் மார்க்கமாகத் தேர்ந்தெடுத்துள்ளேன். (திருக்குர்ஆன் 5:3)

அத்தோடு முஹம்மது நபியும் நானே இறுதித்தூதர், எனக்குப் பின்னர் வேறு ஒரு இறைத்தூதர் வரமாட்டார் எனப் பகிரங்கமாக அறிவித்தார்.

இயேசு இந்த அறிவிப்புக்கு அப்பாற்பட்டவராவார்.

என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். (யோவான்: 14:26)

பின்னால் வரும் இறைத்தூதரே அனைத்தையும் உங்களுக்குச் சொல்லுவார் என இயேசு கூறினார். தம் போதனை முழுமை பெறவில்லை என்கிறார்.

இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள்.

சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். (யோவான் 16:12-13)

பின்னால் ஒரு இறைத்தூதர் வருவார், அவர்தான் அனைத்தையும் சொல்வார் என இயேசு கூறுகின்றார். இயேசுவின் போதனை முழுமை பெறவில்லை என அவரே கூறியுள்ளார். முஹம்மத் நபியின் போதனை முழுமை பெற்றது என குர்ஆன் கூறுகிறது. மோஸேயைப் போன்ற தூதர் கடவுள் கூறிய அனைத்தையும்

கூறுவார் என பைபிள் கூறுவதனால் அந்த முன்னறிவிப்புக்கு முஹம்மத் நபியே பொருத்தமானவர்; இயேசு அதற்குரியவர் அல்ல என்பது உறுதியாகிறது.

முன்னறிவிக்கப்பட்ட மூஸாவைப் போன்ற அந்த நபியின் போதனைக்கு கட்டுப்படாதவர்கள் கண்டிக்கப்படுவார்கள் என அந்த முன்னறிவிப்புக் கூறுகிறது.

என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைக்குச் செவி கொடாதவன் எவனோ, அவனை நான் விசாரிப்பேன். (உபாகமம் 18:19)

இங்கு பல விஷயங்கள் கவனிக்கப்பட வேண்டும். என் நாமத் தினாலே அவர் சொல்லுவார் என்பது ஒரு விஷயம். முஹம்மத் நபி பிஸ்மில்லாஹ் அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு ஆரம்பிக்கிறேன் எனக் கூறித்தான் தம் போதனையைச் செய்தார். குர்ஆனின் 113 அத்தியாயங்கள் இப்படித்தான் ஆரம்பிக்கப்படுகின்றன. அடுத்து, அவர் சொல்லும் செய்தி என் வார்த்தை என தேவனால் கூறப்படுகிறது. முஹம்மத் நபி போதித்த குர்ஆன் கலாமுல்லாஹ் அல்லாஹ்வின் பேச்சு, வார்த்தை என்றே அழைக்கப்படுகிறது. (2:75, 9:6)

அவர் செய்யும் போதனைக்கு செவிகொடாதவர்கள் கண்டிக்கப் படுவார்கள் என இங்கு கூறப்படுகிறது. முஹம்மத் நபியின் போதனைக்கு செவி கொடாதவர்கள் தோல்வியுற்று இழிவடைந்தார்கள். ஆனால், இயேசுவின் போதனைக்கு செவி கொடாதவர்கள் தண்டிக்கப்படவில்லை. கிறிஸ்தவர்களின் நம்பிக்கைப் பிரகாரம் இயேசுவே தண்டிக்கப்பட்டார். இப்படி இருக்க மூஸா நபியைப் போன்ற இறைத்தூதரின் அடையாளத்துக்கு இயேசு முற்றிலும் முரண்படுவதால் இது இயேசுவைக் குறிக்கும் என எப்படிவாதாட முடியும்?

தொடர்ந்து வரும் பகுதியில் உண்மையான தீர்க்க தரிசியை எப்படி அடையாளம் காணலாம் என்பது கூறப்பட்டுள்ளது. ஒரு தீர்க்கதரிசி சொன்ன முன்னறிவிப்பு நடக்காமல் போனால் அவர் உண்மையான தீர்க்கதரிசி அல்லர். அவர் சொன்னது கர்த்தர் சொன்னதும் அல்ல எனக் கூறப்படுகிறது. முஹம்மத் நபி சொன்ன எத்தனையோ முன்னறிவிப்புக்கள் நடந்து முடிந்துவிட்டன மற்றும் பல நடந்துகொண்டிருக்கின்றன மற்றும் பல நடக்க இருக்கின்றன. கிறிஸ்தவ உலகம் இதை கவனத்தில் கொண்டு இந்த இறைத்தூதரை ஏற்கவேண்டும். பைபிள் முன்னறிவிப்புச் செய்த இந்தத் தூதரை ஏற்க மறுப்பது பைபிளையே புறக்கணிப்பதாகும்.

*“உங்களைவிட மூஸா நபி விஷயத்தில் நானே மிகவும் உரிமை உடையவனாவேன்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள். (நூல்: புகாரீ)*

*அவ்வாறே, ஏசுவின் வார்த்தைகளும் முஹம்மத்(ஸல்) அவர்களின் வார்த்தைகளும் ஒற்றைக் கருத்தைக் கொண்டுள்ளன. எனவே, முஹம்மத்(ஸல்) இறைவனின் இறுதித்தூதர் என்பது நிச்சயம் என்ற முடிவுக்கு வந்தேன்.*

*இதற்குப் பின்பு திருக்குர்ஆன் மற்றும் பைபிளிற்கும் இடையில் உள்ள ஒற்றுமை மற்றும் வேற்றுமை குறித்து ஆராய முற்பட்டேன். இஸ்லாம் சம்பந்தமாக புத்தகங்கள் வாசித்தேன்; இன்னும் வாசித்துக் கொண்டுதான் இருக்கிறேன்.*

## பெற்றோரின் எதிர்ப்பு

*நான் எங்கள் வீட்டில் என் பெற்றோர் தூங்கிக் கொண்டிருக்கும் நேரங்களில் அவர்களுக்குத் தெரியாமல் தொழுதுவந்தேன். ஒரு நாள் நான் தொழுது கொண்டிருந்தபோது என் அம்மா பார்த்துவிட்டார்.*

*என்னப்பா இதுன்னு அம்மா கேட்க, நான் முஸ்லிமாகிவிட்டேன் என நான் சொல்ல, எங்கம்மா நக்கலாகச் சிரித்துவிட்டு, “என்னடா இந்துவா பிறந்து அப்புறம் கிறிஸ்டியனா மாறின; இப்போ முஸ்லிம் மாறிட்டியான்னு எதிர்க்கத் தொடங்கினார்கள். அன்று முதல் வீட்டில் தொழுவதற்குத் தடைவிதித்தார்கள். இதனால் நான் வீட்டில் தொழாமல் எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள தோப்பில் தொழுதுவந்தேன். நான் இஸ்லாமிற்கு மாறியதை ஏற்றுக் கொள்ள முடியாத எங்கம்மா எங்களின் சொந்தக்காரர்கள் நண்பர்கள் என எல்லோருக்கும் போன் போட்டு என்னை எப்படியாவது இஸ்லாமிலிருந்து வெளியே கொண்டுவர முயன்றார்கள்.*

*அடுத்த சில மணித்துளிகளில், எனக்கு போன் மேல் போன் என எங்களின் சொந்தக்காரர்களும் நண்பர்களும் போன் போட்டு திட்டித் தீர்த்தார்கள். சிலர் தங்களின் வீடுகளுக்கு அழைத்துச்சென்று கவுன்ஸிலிங் கொடுப்பது போல பேசினார்கள். இறைவன் எனக்கு மனதில் உறுதியைக் கொடுத்திருந்ததால் நான் இஸ்லாமிலேயே நிலைத்திருந்தேன்; இறைவனின் நாட்டப்படியே இறுதிவரை நிலைத்திருப்பேன்.*

அதற்குப் பின்பு நான் அதிகமாக வெளியூர்களில் தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எப்போதெல்லாம் நான் வீட்டிற்கு வருவேனோ அப்போதெல்லாம் எங்கம்மா ‘‘அருண் நீ இஸ்லாத்த விட்டுட்டு வந்துடுப்பான்னு அழுது புலம்பிக் கொண்டே இருந்தார்கள். ஒரு நாள் “அருண் உன் கால்ல கூட விழுறேன்டா, இஸ்லாத்த விட்டுடா” என்று கெஞ்சினார்கள்.

அம்மா நீங்க என்ன சொன்னாலும் நான் கேட்பேன் ஆனா, இந்த ஒரு விஷயத்தில மட்டும் தலையிடாதீங்க; நான் இப்படித்தான் இருப்பேன்; என்னைய படைச்சவனத் தவிர வேறு யாரையும் நான் வணங்க மாட்டேன்” என்பதை உறுதியாகத் தெரிவித்தேன்.

எனக்கு இருந்த எதிர்ப்பு எல்லாவற்றையும் இங்கு சொல்லமுடியாது. வெளிப்படையாகச் சொல்வதாக இருந்தால் ஒரு முறை எங்கப்பா என்னிடம் பேசியபோது, “நீ முஸ்லிமா இருந்தா உன்னை நான் கொண்ணுபோடுவேன்” என கோபமாகப் பேசினார்.

எனக்கு முன்பாக என் தம்பிக்குத் திருமணம் ஆகிவிட்டது. அது ஒரு சந்தர்ப்ப சூழல். எனவே, எப்படியாவது எனக்கு விரைவாக திருமணம் செய்து வைக்க வேண்டும் என்றும், அத்திருமணத்தை சற்று ஆடம்பரமாக நடத்த வேண்டும் என்றும் எங்கள் வீட்டில் விரும்பினார்கள். எங்கள் உறவுகளுக்குள் பெண் பார்க்கவும் தொடங்கினார்கள்.

திருமணம் முடிப்பதில் எனக்கு ஒன்றும் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், பெண் முஸ்லிமாக இருக்க வேண்டும் என்பது தான் என் நிபந்தனை என்பதை நான் உறுதியாகத் தெரிவித்து விட்டேன். இது எங்கள் வீட்டாருக்கு இன்னும் ஒரு தலைவலியாக ஆகிவிட்டது. இருப்பினும் என்னால் முடிந்தளவு எதிர்ப்புகளை சமாளித்தேன்.

## தடைகள் தளர்ந்தன

நான் ஏதோ எங்கள் வீட்டை விட்டே போய்விடுவேன்; அவர்களைப் பார்க்கக்கூட மாட்டேன் என்பது போல அவர்கள் நினைத்துக் கொண்டார்கள். அதனால்தான் இவ்வளவு எதிர்ப்பு என்பதை என்னால் உணரமுடிந்தது. அப்போதுதான் நான் ஒன்றைத் தெளிவாக என் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் புரியவைத்தேன்.

நான் நானாகவே இருக்கிறேன். இதற்கு முன்பு நான் கோவிலுக்குச் சென்று வந்தேன்; இப்போது பள்ளிவாசலுக்குச் சென்றுவருகிறேன்; அவ்வளவுதான் வித்தியாசம். இதை பெரிதுபடுத்தாதீர்கள்.

நான் எந்த மதத்திற்குச் சென்றாலும் உங்கள் மகன் என்பது மாறப்போவதில்லை; அதை யாராலும் மாற்றவும் முடியாது. இஸ்லாமும் இப்படித்தான் சொல்கிறது. இன்னும் சொல்லப் போனால் நான் இஸ்லாமை ஏற்றுள்ளதால் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை முன்பு செய்ததைவிட இன்னும் சரியாகச் செய்தாக வேண்டும். உறவுகளைத் துண்டிக்கக்கூடாது. பெரியப்பா, சித்தப்பா, பெரியம்மா, சின்னம்மா, அத்தை, மாமா, அண்ணன், தம்பி என இப்படி எந்த உறவையும் முறிக்கக்கூடாது என்றுதான் இஸ்லாம் கூறுகிறது.

நம் உறவுக்காரர்கள் எல்லோரின் வீட்டிற்கும் நான் சென்றுவருவேன். அங்கு நடக்கும் அனைத்து விசேஷங்களிலும் கலந்து கொள்வேன். கோவில் விசேஷங்களில் மட்டும் கலந்து கொள்ளமாட்டேன். இறைவனுக்கு இணையாக எதையும் யாரையும் வணங்க மாட்டேன். நான் முஸ்லிம் என்பதற்கு இதுதான் அடையாளம் என்பதைத் திரும்பத் திரும்ப நான் எங்கள் வீட்டில் சொல்லிக் கொண்டே இருந்தேன். அவர்களிடம் திருக்குர்ஆன் வசனங்களில் சிலவற்றையும், நபிமொழிகளில் சிலவற்றையும் எடுத்துரைத்தேன்.

## நான் எடுத்துரைத்த குர்ஆனின் வசனங்கள்

நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் புரிவோரின் தீமைகளை அவர்களை விட்டும் உறுதியாக நீக்கிவிடுவோம். இன்னும், அவர்கள் செய்தவற்றிற்கு அவற்றைவிட அழகான கூலியை நிச்சயமாக அவர்களுக்குக் கொடுப்போம்.

தன் பெற்றோருக்கு நன்மை செய்யுமாறு மனிதனுக்கு உபதேசம் செய்கிறோம். எனினும், உனக்கு அறிவு இல்லாத ஒன்றை எனக்கு இணையாக்குமாறு அவ்விருவரும் உன்னை வற்புறுத்தினால் கட்டுப்படாதே! உங்களின் மீளுதலும் என்னிடமே உள்ளது. நீங்கள் செய்து கொண்டிருந்தவை குறித்து அப்போது உங்களுக்கு அறிவிப்பேன். (திருக்குர்ஆன் 29:7.,8)

அல்லாஹ்வுடன் வேறு கடவுளை ஏற்படுத்தாதீர்! அவ்வாறு செய்தால் இழிந்தவராகவும், உதவியற்றவராகவும் அமர்ந்துவிடுவீர்.

*அவனைத் தவிர (யாரையும்) வணங்காதீர் என்றும், பெற்றோருக்கு நன்மை செய்வதையும் உம் இரட்சகன் விதித்துள்ளான்.*

*அவ்விருவரில் ஒருவரோ, இருவருமோ முதுமையடைந்துவிட்டால், அவர்களை 'சீ..' என்றும் சொல்லாதீர்! அவ்விருவரையும் விரட்டியும் விடாதீர்! அவ்விருவரிடமும் கண்ணியமான பேச்சையே பேசும்!"*

*இரக்கம் கொண்டு பணிவு என்னும் சிறகுகளை அவ்விருவருக்காகத் தாழ்த்தவும் செய்வீராக!*

*"என் இரட்சகனே! நான் சிறு பிள்ளையாய் இருந்தபோது, அவர்கள் இருவரும் என்னை (பரிவோடு) வளர்த்ததுபோல், நீயும் அவர்கள் இருவருக்கும் கிருபை செய்வாயாக!" என்றும் பிரார்த்திப்பீராக!*

*உங்களின் உள்ளங்களில் (இவர்களைக் குறித்து) இருப்பதை உங்கள் இரட்சகன் நன்கறிவான். நீங்கள் நல்லவர்களாய் இருந்தால், நிச்சயமாக மன்னிப்புக் கோருபவர்களை அவன்தான் அதிகம் மன்னிப்பவன். (திருக்குர்ஆன் 17:22-25)*

*''எதைச் செலவிட வேண்டும்?'' என அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். "பெற்றோருக்கும், நெருங்கிய உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் நல்லதில் எதை நீங்கள் செலவிட்டாலும், நன்மையிலிருந்து நீங்கள் எதைச் செய்தாலும் நிச்சயமாக அதை அல்லாஹ் நன்கறிந்தவன்" என்று (தூதரே) கூறும். (திருக்குர்ஆன் 2:215)*

*அல்லாஹ்வையே வணங்குங்கள்; அவனுக்கு எதையும் இணை ஆக்காதீர்கள்! மேலும், பெற்றோருக்கும், நெருங்கிய உறவுகளுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டைவீட்டு உறவுகளுக்கும், நெருங்கிய அண்டைவீட்டாருக்கும், நண்பர்களுக்கும், வழிப் போக்கர்களுக்கும், உங்களிடமுள்ள அடிமைகளுக்கும் நன்மை செய்யுங்கள்! கர்வம் மற்றும் வீண்பெருமை உடையோராய் இருப்போரை அல்லாஹ் நேசிப்பதே இல்லை. (திருக்குர்ஆன் 4:36)*

*மேற்கண்ட வசனங்களையும் இன்னும் சில வசனங்களையும் அவர்களிடம் கூறினேன். அவர்களிடம் சிறிய சிறிய மாற்றத்தை நாளுக்கு நாள் என்னால் உணரமுடிந்தது.*

## நான் எடுத்துரைத்த நபிமொழிகள்

*''உறவைப் பேணி நடந்து கொள்பவனுடன் நானும் நல்ல முறையில் நடந்துகெள்வேன்; உறவைத் துண்டித்துவிடுபவனை*

*நானும் துண்டித்துவிடுவேன் என இறைவன் கூறினான் என்று இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள். (நூல்: முஸ்லிம் 5987)*

*இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து, "இறைத்தூதர் அவர்களே! நான் அழகிய முறையில் உறவாடுவதற்கு மிகவும் அருகதையானவர் யார்?" எனக் கேட்டார்.*

*"உன் தாய்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*
*"பிறகு யார்?" என அவர் கேட்டார்.*
*"உன் தாய்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*
*"பிறகு யார்?" என அவர் கேட்டார்.*
*"'உன் தாய்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*
*"பிறகு யார்?" என அவர் கேட்டார்.*
*"உன் தந்தை" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள். (நூல்: புகாரீ 5971)*

*"தன் பெற்றோரில் இருவரை அல்லது அவர்களில் ஒருவரையேனும் (நன்மைகள் செய்து) அடைந்தவர், அதற்குப் பின்பு நரகத்தில் புகுந்தால், அல்லாஹ் அவரை அதிலிருந்து தூரமாக்கி, அதிலிருந்து அவரை வெளியேற்றவும் செய்கிறான்' என்று இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்" என ஸுராரா இப்னி அவ்ஃபா மற்றும் உபை இப்னி மாலிக்(ரலி) அறிவித்தனர். (நூல்: முஸ்னத் அஹ்மத் 19027, 19029, 20328)*

*"பெரும் பாவங்களில் மிகப்பெரும் பாவங்களை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?" என இறைத்தூதர்(ஸல்) மும்முறை கேட்டார்கள்.*

*"இறைத்தூதர் அவர்களே! ஏனில்லை (அறிவியுங்கள்)" என மக்கள் கூறினார்கள்.*

*"அல்லாஹ்வுக்கு இணைவைப்பதும், பெற்றோருக்குத் துன்பம் தருவதும்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

*பின்னர், சாய்ந்திருந்த அவர்கள் எழுந்து அமர்ந்து, "அறிந்து கொள்ளுங்கள்; பொய் சாட்சியமும்தான் (பெரும் பாவங்களில் மிகப்பெரியது)" என்றும் இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள் என அபூ பக்ரா(ரலி) அறிவித்தார். (நூல்: புகாரீ 2654, முஸ்லிம் 78 / 143)*

*"முறித்து வாழ்பவன் அதாவது உறவைத் துண்டித்து வாழ்பவன் சுவர்க்கத்தில் நுழைய மாட்டான்" என்று இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள். (நூல்: புகாரீ 5984, முஸ்லிம் 4996)*

*குர்ஆன் வசனங்களைக் கூறியது போலவே மேற்கண்ட*

நபிமொழிகளையும் என் பெற்றோரிடம் கூறிக் கொண்டே இருந்தேன். இது நடக்குமா நடக்காதா என்பது போல அப்பாவித் தனமாக அவர்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு காலகட்டத்திற்கு மேல் நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதையும், நான் என் கொள்கையில் உறுதியாய் இருப்பதையும் என் பெற்றோர் புரிந்துகொண்டார்கள். என் மீதிருந்த அவர்களின் கோபமும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. என் பெற்றோர் எனக்கு போட்டுவந்த தடைகள் தகர்ந்தன. ஒருவழியாக எனக்கு முஸ்லிம் சமூகத்தில் பெண் பார்ப்பதற்கும் என் பெற்றோர் சம்மதம் தெரிவித்தார்கள். முஸ்லிம் பெண் இருக்கிறதா என சில இடங்களில் அவர்களே முன்வந்து விசாரிக்கவும் செய்தார்கள்.

ஆனால், அவர்களைப் பெண் பார்க்கவிடுவதில் எனக்கு விருப்பம் இல்லை. ஏனெனில், இஸ்லாம் சரியாகத்தான் இருக்கிறது; நம் இந்தியா போன்ற நாடுகளில் வசிக்கும் முஸ்லிம்களில் பலரும் இஸ்லாம் காட்டிய வழியில் வாழ்வதில்லை. என் போன்றவர்களுக்கு இஸ்லாம் தாமதாகக் கிடைத்ததற்கு இதுவும் ஒரு காரணம். அவர்களின் இஸ்லாம் அல்லாத இந்த வாழ்க்கை முறைக்கு அவர்களின் சுற்றுச்சூழலும் ஒரு காரணமாய் இருக்கலாம்.

எனவே, வரதட்சணை வாங்காமல், இஸ்லாம் கூறியுள்ள மஹர் என்னும் திருமணக் கொடையை மணமகளுக்குக் கொடுத்து, மாலைகள், பூச்செண்டுகள், கச்சேரிகள், வேடிக்கை மற்றும் ஆடம்பரங்கள் இல்லாமல், ஜோடிப் பொருத்தம், ஜாதகம், சுபமுகூர்த்தம், ராகு எமகண்டம் எனக் காலங்களைக் காரணம் கூறாமல், வாழை மரம், ஆராத்தி போன்ற அனாச்சாரங்கள் இல்லாமல் இஸ்லாம் காட்டித் தந்துள்ள இறைவழித் திருமணம்தான் என் நோக்கமாக இருந்தது.

எனவே, இந்த முறைப்படி இஸ்லாமை நன்றாக அறிந்துள்ள குடும்பத்தில் இஸ்லாமை அறிந்து அதன்படி வாழுகிற ஒரு பெண்ணைத் தேர்வு செய்துதான் திருமணம் செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன்.

என் அம்மாவின் சித்தி மகன் ஒருவர் பல ஆண்டுகளுக்கு முன்பு இஸ்லாமை ஏற்று நன்றாக இறைப்பணியும் செய்துவந்தார். ஆனால், எனக்கு அது ரொம்ப காலமாகத் தெரியாமலேயே இருந்தது. பின்னர் எனக்கு விஷயம் தெரிந்ததும் அவரை அணுகினேன். அவர்தான் எனக்கு பல்வேறு இடங்களில் பெண்

*பார்த்தார். இறுதியாக ஓர் இடத்தில் பெண்ணும் அமைந்தது. எங்கள் பெற்றோர் மற்றும் உறவுக்காரர்கள் அனைவரையும் அழைத்துச் சென்று பெண்வீட்டாரிடம் நல்ல முறையில் பேசி இஸ்லாம் கூறியுள்ள முறைப்படி வரதட்சணை எதுவும் வாங்காமல், மஹர் என்னும் திருமணக் கொடையை பெண்ணுக்கு அளித்து திருமணம் செய்து இன்றும் முஸ்லிமாக வாழ்ந்து வருகிறேன்.*

*அல்லாஹ் என்னையும் என் குடும்பத்தாரையும் நேர்வழியில் நிலைத்திருக்கச் செய்யவேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன். என் பெற்றோரும் இஸ்லாமை ஏற்கவேண்டும்; என் உறவுக்காரர்களும் இஸ்லாமை ஏற்கவேண்டும்; அவர்கள் அனைவரும் நாளை மறுமையில் சுவர்க்கம் புகவேண்டும் என்ற அவாவில் அவர்களுக்காகவும் தொடர்ந்து இறைவனைப் பிரார்த்தித்து வருகிறேன். முஹம்மத் அப்துல்லாஹ் ஆகிய நான் வாசக அன்பர்களையும் பிரார்த்திக்க வேண்டுகிறேன்.*

*இந்த இடத்தில் முஸ்லிம்களுக்கு ஒன்றைத் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*முஸ்லிம்களே! நீங்கள் இஸ்லாமிற்கு வாருங்கள் என யாரையும் அழைப்பதில்லை; உங்கள் மார்க்கத்தை பிறர் மீது திணிப்பதில்லை; ஆனாலும், மக்கள் இஸ்லாமின் மகத்துவத்தைக் கண்டு அதை நோக்கி வந்துகொண்டே இருக்கிறார்கள். நீங்கள் பெயர்தாங்கி முஸ்லிம்களாக அல்லாமல் உண்மை முஸ்லிகளாக வாழ்ந்து காட்டினால் போதும், சில ஆண்டுகளில் உலகமே இஸ்லாமிய மயமாகிவிடும். இதை ஏன் நீங்கள் புரிந்து கொள்வதில்லை?*

*உங்களை யாராலும் மாற்றமுடியாது; உங்களை நீங்களே மாற்றிக் கொள்ளுங்கள்! ஒரு மாபெரும் மாற்றத்திற்கு வித்திடுங்கள்!*

*நம் எண்ணங்களுக்கு ஏற்ற கூலியை இம்மையிலும், மறுமையிலும் இறைவன் வழங்குவானாக!*

*****

சிறு வயதில் எனக்கு பக்தி இருந்தாலும், சிறிது காலத்திலயே கடவுள் குறித்த மன அழுத்தம் எனக்கு ஏற்பட்டது. எனவே, கடவுள் குறித்து ரொம்பவே சிந்திக்க ஆரம்பித்தேன். கடவுள் என்றால் யார் ? அவர் எப்படி இருப்பார் ? கல்லும் மண்ணும் கடவுளாய் இருக்க முடியுமா என்ற வினாக்கள் பல என்னுள் எழுந்தன. இவற்றிற்கு என்னால் விடை காணமுடியவில்லை படைப்பினங்களை கடவுளர்களாய் என்னால் ஏற்க முடியவில்லை. கற்சிலைகள் என்னைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையை இழந்தேன். இவை என்னைக் காப்பாற்றும் என நான்தான் தவறாக விளங்கி இருந்தேன். உண்மையில் இவற்றிற்கு சக்தி எதுவும் கிடையாது. இவை எனக்கு நன்மையும் செய்யவோ, தீமையும் செய்யவோ ஆற்றல் பெற்றிருக்க வில்லை என்பதை உணர்ந்தேன்.

இனிமேல் கோவிலுக்குச் செல்லக்கூடாது; இவற்றை வணங்கவும் கூடாது என உறுதி எடுத்தேன். கடவுள் இல்லை; கடவுள் என்பது ஒரு கற்பனை என எனக்குத் தோன்றியது. ஆனால், நான் காணும் யாவும் தானாகவே உருவாகி இருக்கும் என்பதையும் என்னால் ஏற்க முடியவில்லை. நான் ஒரு பொறியியல் மாணவன். நான் படித்த அறிவியலில் எந்த ஒரு பொருளையும் ஒருவர் தயாரிக்காமல் அது தானாகவே தோன்றிவிடும் என்பது ஏற்புடையதாய் இல்லை. இருந்தாலும், இது குறித்து நான் யாரிடமும் விவாதித்தது கிடையாது.

இறுதியாக என்னால் ஒரு முடிவுக்கு வர முடிந்தது. அதாவது தனக்கு நிகரில்லாத, தனித்தவனாக, எல்லா ஆற்றலையும் பெற்றவனாக இருப்பவனே கடவுளாய் இருக்க முடியும் என்பதுதான் அந்த முடிவு. நான் அதைநோக்கி நகர்ந்தபோதுதான் கிறிஸ்த்துவம் எனக்கு முதலில் சரியாகப்பட்டது. ஆனால், அங்கேயும் மூன்று கடவுள் என்றும் அதில் கர்த்தர்தான் மெய்யான கடவுள் என்பதை பைபிளின் வாயிலாகவே அறிந்தேன். இந்த உண்மை திருக் குர்ஆனில் இருப்பதையும், முஸ்லிம்கள் கர்த்தரைத் தவிர வேறு யாரையும் வணங்கமாட்டார்கள் என்பதையும் இதுதான் சரியான வழி என்பதையும் அறிந்தேன். எனவே, இறுதியாக நானும் அவ்வழியில் செல்ல வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். அந்த முடிவு அருண் குமாராக இருந்த என்னை முஹம்மத் அப்துல்லாஹ்வாக மாற்றியது. உண்மையில், நான் மதம் மாற வில்லை இயற்கையான என் மார்க்கத்திற்கு நான் திரும்பியுள்ளேன் என்பதே மறுக்கமுடியாத உண்மை.

ISLAMIC PUBLICATIONS RESEARCH CENTRE